உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 27] கீலக - புரட்டாசி - 10—10—68 [இதழ் 11

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

கந்த விரதம்

'நல்லது இது; தீயது இது' என்னும் பாகுபாடு இன்றி, எவ்விடத்திலும் செல்லும் இயல்புடையது மனம். அதன் வேகத்தை அடக்கி நன்மையாகிய ஒருநெறியிலே செலுத்துதற்கு உரிய சாதனமாய் அமைவது விரதம். 'இன்ன நற்செயலைச் செய்வேன்; இன்ன தீச்செயலைச் செய்யமாட்டேன்' என்று உறுதி பூண்டு, அவ்வுறுதியில் மாருது நிற்பதே விரதமாகும். இத்தகைய உறுதிப்பாட்டில் இடையூறுகள் பல நிகழ்தல் இயற்கையே. அதனுல், அவ் இடையூறுகள் பலவற்றையும்

பொறுத்துக்கொண்டு, நிலைபிறழாது நின்றே விரதத்தை நிறைவேற்றுதல் வேண்டும். துன்பங்கள் பலவற்றையும் பொறுத்துக் கொள்ளுதலும், நல்லன பலவற்றையும் மேற்கொண்டு நிற்றலும் ஆகிய இயல்பு பற்றி, விரதத்திற்குத் தமிழில், 'நோன்பு' என்பது பெயராயிற்று. நோன்றல் - பொறுத்தல்; தாங்கி நிற்றல். 'நோன்றல், நோன்பு' என்பவற்றிற்கு அடிச்சொல், 'நோன்' என்பது. இதற்கே மேற்கூறிய இருபொருள்களும் உண்டு.

இனி, நோன்' என்ற இதுவே சிறிது வேறுபட்டு, 'நோல்' என்று ஆகித் தவம் செய்தலைக் குறித்து நிற்கும். தவம் செய்தல் தமிழில், 'நோற்றல்' என்று சொல்லப்படும். எனவே, 'நோன்பே தவம்' என்பது விளங்குவதாம். தவத்தைத் 'திருவள்ளுவர்' 'விரதம்' என்ற பகுதியில் கூறியிருத்தலோடு. "உற்றநோய் நோன்றல்; உயிர்க்கு உறுகண்செய்யாமை - அற்றே தவத்திற்கு உரு" என்று தவத்தின் இயல்பு கூறியிருத்தல், தவமாவது நோன்பே என்பதனை இனிது விளக்கும். நோன்புகளின் பகுதிகள் பலவும், அட்டாங்க யோகத்தில், 'இயமம், நியமம்' என்ற முதல் இரண்டு படிகளாகச் சொல்லப் படும்.

நோன்பில், உண்டி சுருக்குதல் முதன்மையாகவும், உறக்கத்தைக் குறைத்தல் அடுத்தபடியாகவும் கொள்ளப்படும். இவ்விரண்டினாலும் மனத்தின் வேகம் மட்டுப்படுவதாகும். துறவறத்தோர், என்றும் இத்தகைய நோன்பினை உடையராய் இருப்பர். எனினும் அவர்களும் சில சிறப்பு நாட்களில் நோன்பினைக் கடுமையாக மேற்கொள்வது உண்டு. இல்லறத்தவர்கள் உலகியலில் பலவகைப் பணிகளில் ஈடுபடுபவர்கள். ஆதலால் அவர்கட்குக் குறிப்பிட்ட சில தினங்கள் நோன்பு நாட்களாக அமைகின்றன.

மனத்தை ஒருவழிப்படுத்தற்குச் சாதனமாய் அமைந்த விரதங்கள், அந்த மனம் ஒருநிலையாகச் சென்று பற்றுதற்குரிய குறிக்கோளை உடையனவாய் இருத்தல் வேண்டும். இல்லையேல், அவை பொருளில்லாதனவாய்ப் போய்விடும். நோன்புகள் அல்லது விரதங்களுக்குரிய சிறந்த குறிக்கோள் தெய்வத் திருவருளைப் பெறுதலேயாகும் அதனால், தெய்வத் தொடர்புடைய விரதங்களே விரதங்களாகும். உற்றநோய் நோன்றலை

யும், உயிர்க்கு உறுகண் செய்யாமையையும் தவத்திற்கு 'உரு-உடம்பு' என்று கூறிய திருவள்ளுவர், ''ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம் இன்றே - மெய்யுணர்வு இல்லாதவர்க்கு'' என, இறையுணர்வை அதற்கு, 'உயிர்' என்று கூறியுள்ளார்' ஆதலின் விரதங்களைத் தெய்வங்களோடு தொடர்புபடுத்தி மேற்கொள்வதே நமது மரபாய் உள்ளது. தெய்வத் தன்மையுடைய அத்தகைய விரதங்கள் பலவற்றை நமது புராணங்கள் வாயிலாக நாம் நன்கு உணரலாம்.

மேற்கூறிய விரதங்கட்குரிய பயனைத் தருவன, அவரவர் கருதும் தெய்வங்களாம். இக்கலியுகத்திலும் தன்னை வழிபடுவோர்க்கு எளிதில் தோன்றி அருள்புரிபவன் முருகப்பெருமான். 'நெஞ்சில் ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும் - முருகாஎன் றோதுவார் முன்'' ''செவ்வேற் சேஎய் - சேவடி படரும் செம்மல் உள்ளமொடு - நலம்புரி கொள்கைப் புலம் பிரிந் துறையும் - செலவுநீ நயந்தனை யாயின் பலவுடன் - நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப - இன்னே பெறுதிநீ முன்னிய வினையே' என்பனபோன்ற வாக்குக்கள், முருகன் மிக எளியனாய் வந்து அருள்புரிதலைக் காட்டும். கலிகாலத்திலும் இவ்வாறு அருள்புரிதல் பற்றி அப்பெருமான், 'கலியுக வரதன்' எனப் படுகின்றான். முருகப்பெருமானைப் பற்றிய விரதங்கள் பல புராணங்களில் சொல்லப்பட்டுள்ளன. கந்த புராணத்தில் முருகனைப் பற்றிய விரதங்களின் சிறப்புக்கள், கந்த விரதப் படலத்தில் சொல்லப்பட்டுள்ளன

முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு வசிட்ட முனிவர் கூறுவதாக அமைந்துள்ள அப்பகுதியில், கிழமைகளில் வெள்ளியும், நட்சத்திரங்களில் கார்த்திகையும், திதிகளில் சஷ்டியும் கந்தக் கடவுளுக்குரிய விரத நாட்களாகச் சொல்லப்பட்டுள்ளன. அவற்றில் சஷ்டி, ஐப்பசி மாதத்துச் சுக்கில பட்சத்து சஷ்டியே என்றும், அந்தச் சஷ்டி விரதத்தை அந்தச் சுக்கில பட்சத்துப் பிரதமை தொடங்கி ஆறு நாட்கள் அநுட்டித்து, ஏழாம் நாள் பாரணை முடித்து, அமரர்கள், அசுரர்களால் தாங்கள் இழந்த பதவிகளைப் பெற்றார்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளன.

''வெற்பொடும் அவுணன் தன்னை வீட்டிய தனிவேற் செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி அமரரும் முனிவர் யாரும்
சொற்படு துலையின் திங்கள் சுக்கில பக்கந் தன்னில்
முற்பகல் ஆதி யாக மூவிரு வைகல் நோற்றார்''

(துலைத் திங்கள் - ஐப்பசி மாதம். முற்பகல் - பிரதமை.)

"ஆரண முனிவர் வானோர் அங்கதன் மற்றை வைகல்
சீரணி முருக வேட்குச் சிறப்பொடு பூசை ஆற்றி
பாரணம் விதியிற் செய்தார்; பயிற்றும்இவ் விரதந் தன்னால்
தாரணி அவுணர்கொண்ட தம்பதத் தலைமை பெற்றார்"

என்ற அப்பாடல்களைக் காண்க (மற்றை வைகல் - ஆறுநாளை அடுத்து வரும் நாள்; ஏழாம் நாள்.)

முருகப்பெருமான் சூரபதுமனைச் சங்கரித்ததும், அதனால் அவன் தனது பாவத்தினின்றும் நீங்கி, முருகப்பெருமானுக்கு வாகனமும், கொடியுமாய் வாழும் பேற்றினைப் பெற்றதும் அமரர்களும் முருகன் அருளால் தாங்கள் தக்கன் வேள்வியிற் சென்றிருந்த குற்றம் முழுவதும் நீங்கச் சிறைவீடு பெற்று முன் போலவே சுவர்க்க வாழ்வைப் பெற்றதும் ஆகிய சிறந்தநாள் ஐப்பசி மாதத்துச் சுக்கில பட்சத்துச் சஷ்டிதிதியே என்பது ஐதிகம். அதனால், அந்தச் சஷ்டி விரதம் முருகப்பெருமானைப் பற்றிய விரதங்கள் பலவற்றிலும் சிறப்பாக இன்றும் எங்கும் கொண்டாடப்பட்டு வருவது பலரும் அறிந்தது.

இந்த விரதத்தின் தொடக்க நாள் முதலாகவே தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருச்செந்தூரில் எழுந்தருளியிருந்து சிறந்த விரதத்துடன், செந்தில் ஆண்டவனுக்கு வழிபாடுகள் பலவற்றைச் செய்வித்து, முருகனைப் பற்றிய அருள்நூல்களை வெளியிடுவித்து, அன்பர்களுக்குக் குருவருளையும், திருவருளையும் வழங்குவார்கள். அந்தச் சிறப்பு நன்னாள் அண்மையில் வர இருப்பது அன்பர்கள் பலர்க்கும் அகமகிழ்வைத் தருவதாகும்.

மாதந்தோறும் வரும், சுக்கில பட்சத்துச் சஷ்டி திதியும் முருகனுக்குரிய விரத நாட்களேயாயினும், முதன்மை பெற்ற மகாசஷ்டி, இந்த ஐப்பசித் திங்கள் வளர்பிறைச் சஷ்டியே யாதலின், அந்நாளில் அறுமுகக் கடவுளை மறவாது சிந்தையில் இருத்தி, இயன்ற அளவு, விரதத்தையும், வழிபாட்டினையும் உடையவர்களாய், யாவரும் முருகன் திருவருட்கு உரியர் ஆவோமாக.

குருவருள்

அறநெறியும் அருள்நெறியும்

"தனக்குவமை இல்லாதான்"

இறைவன் எல்லாப் பொருள்களையும் பற்றிநின்றே ஒன்றினும் தோய்வின்றிப் பற்றற்று நிற்கின்றான் என்பதை விளக்க அவனைப் "பொறிவாயில் ஐந்தவித்தான்" எனக் கூறிய திருவள்ளுவ நாயனார், பின்பு அவனே, "தனக்குவமை இல்லாதான்" எனக் குறித்தருளினார். இத் தொடரில், "உவமை" என்றது, ஒருபுடை ஒப்புமைபற்றி அணி நூலில் கூறப்படும் உவமையோ அல்லது அளவை நூலில் கூறப்படும் உவமையோ அன்று. மற்று, முழுவதும் ஒத்திருத்தலாகிய, 'இனம்' என்னும் பொருளையுடையதாகும். ஏனெனில், ஒருபுடை ஒத்திருத்தலாகிய உவமை இறைவனுக்கு உண்டாதலின். "அகர முதல எழுத்தெல்லாம்" என்று திருவள்ளுவரே காட்டிய உவமையும், 'இது, தலைமை பற்றி வந்த எடுத்துக்காட்டுவமை' என்று பரிமேலழகர் உரைத்த உரையுமே, அணி நூலிலும், அளவை நூலிலும் சொல்லப்பட்ட உவமைபோலும் உவமைகள் இறைவனுக்கும் உளவாதலை நன்கு புலப்படுத்தும்.

அணிநூலில் சொல்லப்படும் உவமை, பொருளினது உயர்வு சிறப்பு, அல்லது இழிவுசிறப்பைப்புனைந்துரைவகையால் மிகைப் படுத்திப் புகழ வருவது. 'முகம் சந்திரன்போல்வது; செந்தாமரை போல்வது; சந்திரனை வென்று மிகுவது; செந்தாமரையை வென்று மிகுவது' என்றாற்போல வருவன இதற்கு எடுத்துக் காட்டுக்களாம். 'முகம் சந்திரன்போன்ற ஒளியை உடையது அன்று' என்பது வெளிப்படை. எனவே, முகத்திற்குச் சந்திரனிலும் மிக்க ஒளி இல்லை என்பதைச் சொல்லத் தேவை இல்லை. ஆகவே, அணி குறித்து வரும் உவமை முற்றிலும் புனைந்துரையேயாதல் நன்கறிந்துகொள்ளப்படும். அதனால், அவ்வாற்றால் புகழப்படும் அப்பொருள்களின் புகழ்களெல்லாம் முற்றிலும் பொருள்சேர் புகழ்கள் அல்லவாம். தொல்காப்பியர்

தமது உவம இயலில் இப்புனைந்துரை உவமைக்கே இலக்கணம் கூறினர். ஏனெனில், அவர், அகமும் புறமுமாகிய பொருள் களைச் சுவைபடக் கூறும் பாடல்களாகிய இலக்கியங்கட்கு உரிய இலக்கணத்தையே கூறப் புகுந்தாராதலின். இப்பாடல் கள் புனைந்துரைகளையுடையன என்பதை, "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் - பாடல் சான்ற புலனெறி வழக்கம்", என்பதனால் அவர் குறித்தார். எனவே அவர் கூறியது அப் புலனெறி வழக்கத்தில் வரும் உவமைகளின் இலக்கணமே என்பது தெளிவாயிற்று.

இனி, அளவை நூலில் சொல்லப்படும் உவமை, நேரே காணப்படாத பொருளை அதனோடு ஒருவாறு ஒத்துக் காணப் படும் பொருள்பற்றிக் கருதி யுணர்தற் பொருட்டுச் சொல்லப் படுவது. இது, பொருளின் இயல்பை உள்ளவாறு உணர்த்த வருவதல்லது, அதன் இயல்பை மிகைப்படுத்திப் புனைந்து கூற வருவதன்று. காட்டில உள்ள ஆமாவை அறியாதவனுக்கு அதனை அறிவிக்கப் புகுவான் ஒருவன், நாட்டில் அவன் காணும் ஆவை(பசுவை)க் காட்டி 'இவ் ஆப்போல்வதே அவ் ஆமாவும்' எனக் கூறுதல் அளவை நூலில் கூறப்படும் உவமைக்கு எடுத் துக் காட்டாகும். இதனுள் புனைந்துரை இல்லாமை தெளிவு. இறைவனது இயல்பினும் உயர்ந்த இயல்பு எப்பொருட்கும் இன்மையால் அவனைப் புகழ்தற்குக் கூறப்படும் உவமைகள் யாவும் அவனினும் குறைபாடுடையனவேயாம். ஆகவே, இறைவனை, 'தாய்போல்பவன்' என்றும், 'கனியும், கட்டியும், பாலும், தேனும், போல்பவன் என்றும் புகழப்படும் புகழ்க ளெல்லாம் முற்றிலும் பொருள்சேர்ந்த புகழேயாதலோடு, அவ்வுவமைகளில் அடங்காது அவற்றினும் மிக்கிருக்கும் பெரும் புகழ்களாம். அதனால், இவ்வுவமைகள் அணிநூலில் சொல்லப் படும் உவமைகளோடு ஒருவாறு ஒப்பனவன்றி, முழுவதும் ஒவ்வாவாய்க் கிழ்ப்படுவனவாம்.

திருக்குறள் அறத்துப்பால் பொருட்பால்களில் கூறப்படும் உவமைகள் அணி பற்றி வரும் உவமைகளாகாது, அளவை பற்றி வரும் உவமைகளேயாம். அதுபற்றியே பரிமேலழகர், அணிபற்றியதுபோலக் காணப்படும் உவமைக்குச் சிறப்புப் பொருள் கூறுவர். 'பெண்வழிச் சேறல்' என்னும் அதிகாரத் தில், "இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள் - அமையார்

தோள் அஞ்சு பவர்'' என்ற குறளில் வந்துள்ள, ''அமையார் தோள்'' என்ற உவமை, அணி குறித்ததுபோலக் காணப்படு கின்றது. அதனால், 'அமையார் தோள் எனவே, அஞ்சுதற் காரணத்தது எண்மை கூறியவாறு' எனச் சிறப்புப் பொருள் கூறினர் பரிமேலழகர். 'மத்தளம் போல்வனவும், மலை போல் வனவும் ஆகிய மல்லர்கள் தோள்களுக்கு அஞ்சாத ஆண்மகன், தன் இல்லாளது மூங்கில்போலும் தோளுக்கு அஞ்சுதல் இழி வைத் தருவது' என்பது அவ்வுவமையால் குறிக்கப்பட்டது என்பது அவரது கருத்து. எனவே, திருக்குறளில் மேற்கூறிய இரு பால்களிலும் வரும் உவமைகள் வெறும் புகழ்ச்சிக்காக வன்றிப் பொருளை உள்ளவாறு இனிது விளக்குதற்கு வருவன வாதல் தேற்றம்.

இங்ஙனமாகவே, முதற்குறளில் இறைவனுக்கு அகரத்தை உவமையாகக் கூறியதும், அளவை பற்றிய உவமையேயாயிற்று. சாத்திரங்களில் இறைவனுக்குக் குயவன் முதலியோரை எடுத்துக்காட்டும் உவமைகளும், ஒருவாற்ருன் ஒத்து அவனது இயல்பை ஓரளவு புலப்படுத்திநிற்கும் உவமைகளேயாம். எனவே, இறைவனுக்கு அணி பற்றியும், அளவை பற்றியும் சொல்லப்படும் உவமைகள் ஓரளவில் உள்ளன என்பது பெறப் படுதலால், ''தனக்குவமை இல்லாதான்'' என்றதில், 'உவமை' என்றது, மேற்கூறிய உவமைகளில் ஒன்ருகாது முழுவதும் ஒத்துள்ள, 'இனம்' என்பதையே குறித்தது என்பது முடிவா யிற்று.

இனமாவது, ஒரு நிகரனவாகிய பலபொருள்களின் வகை. இதனையே, 'சாதி' என்பர். ஒருநிகரனவாய் நிற்கும் குடங்கள் பலவும், 'குடம்' என்ற ஓர் இனத்தைச் சார்ந்தனவாதல் போல்வன இதற்கு எடுத்துக்காட்டுக்களாகும். தொல்காப்பிய ஞர் இங்ஙனம் முழுவதும் ஒத்து ஒருநிகரனவாதலையே, 'இனம்' என்றும், சிறிது ஒப்பும், சிறிது ஒவ்வாமையும் உடையவற்றை, 'கிளை' என்றும் வழங்குதல் காணலாம். நன்னூலார், உயி ரெழுத்துக்களுள் 'குறிலும் நெடிலும் தம்முள் இனம்' என்றும், மெய்யெழுத்துக்களுள், 'வல்லெழுத்தும் மெல்லெழுத்தும் தம்முள் இனம்' என்றும் கூறினராயினும், தொல்காப்பியர் அங்ஙனம் கூருமை நோக்கத்தக்கது. 'ஒற்றிடை இனம்மிகா மொழியுமா ருளவே', ''வல்லொற் றிறுதி கிளையொற்ருகும்''

என்ற தொல்காப்பியப் பகுதிகளைக் காண்க. "தனக்குவமை இல்லாதான்" என்றதில் "உவமை" என்றது இனம் எனவே, "தனக்குவமை இல்லாதான்" என்றது, 'தன்னோடு முற்றிலும் ஒத்து ஒருநிகர்த்தாய் நிற்கும் பொருள் வேறொன்றை இல்லாதவன்' என்றதாயிற்று. ஆகவே, இத்தொடர், 'இறைவன் அல்லது கடவுள் ஒருவனேயன்றிப் பலர் இல்லை' என, அவனது தனிமையைக் கூறியதாம்.

'இறைவன் ஒருவனன்றிப் பலர் இல்லை' என்பதை, "ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்" எனத் திருமூலரும், "ஒன்றென்ற தொன்றேகாண் ஒன்றே பதி" என மெய்கண்டாரும் அருளிச்செய்தனர். வேதத்திலும், 'ஏகம் சத் – மெய்ப்பொருள் ஒன்றே' எனக் கூறப்படுகின்றது. 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க" என்பது திருவாசகம். எனவே, "தனக்குவமை இல்லாதான்" என்றது, இறைவன் ஏகனுதலையே குறித்ததாம். இதற்கு, 'ஒருவாற்றானும் தனக்கு நிகரில்லாதவன்' என்று உரை கூறிய பரிமேலழகர்க்கும் இதுவே கருத்தாதல் தெளிவு. இறைவனுக்கு, 'தன்வயத்தனாதல்' முதலிய எட்டுக் குணங்கள் உள்ளனவன்றோ! 'அவற்றுள் ஒன்றேனும் பிறர் ஒருவர்க்கு இல்லை' என்பதே, 'ஒருவாற்றானும் தனக்கு நிகரில்லாதவன்' என்றதன் பொருளாகும்.

"சீவனும் இச்சா ஞானச் செய்தியால் சிவனோ டொப்ப
னுவன் என்றிடின், அனாதி மலம் இவற்றினை மறைக்கும்"

(சிவஞான சித்தி, சூ. 1.64.)

என்பதுபோலக் கூறப்படுவனவும், 'சித்தாதற் பொதுமையால் உயிர்களும் இறைவனோடு ஒரு நிகரவாய பொருள்களாமன்றோ' என்னும் ஐயத்தை நீக்க எழுந்தனவாகும். இவற்றாலெல்லாம், கடவுட்பொருள், தன்னோடு ஒரு நிகர்த்தாக வைத்து எண்ணுதற்கு இரண்டாவதொரு பொருளில்லாத தனிப்பொருளேயன்றி வேறில்லை என்பது தெளிவுற விளங்கும்.

இறைவன் இங்ஙனம் தன்னோடு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தனிப்பொருளாய் விளங்குதற்கு அவனது எண்குணங்களே காரணம் எனினும், அவற்றுள், 'முடிவிலாற்றல்' என்பதனாலேயே இது தெளிவுற விளங்குவதாகும். முடிவாவது

எல்லை. எல்லை, 'கால எல்லையும், இட எல்லையும்' என இரண்டு வகையினையுடையது. கால எல்லை, 'பிறப்பும் இறப்பும்' என்ற இரண்டாய் அமைவது. அவ்விரண்டும் இறைவனுக்கு இல்லையாதலின் அவன் கால எல்லை இல்லாதவனாகின்றான். இட எல்லை, இடமும், இடத்து நிகழ்பொருளும் ஆகிய இரண்டினால் அமைவது. இறைவன் எங்கும், எல்லாப்பொருளிலும் நிறைந்து நிற்பதுமட்டும் அன்று; எல்லா உலகங்களையும் தன்னுள் அடக்கி அவற்றிற்கு அப்பால் நிற்பவனாதலின், இட எல்லையும் அவனுக்கு இல்லையாம். இவ்வாறு கால எல்லையையும், இட எல்லையையும் கடந்து நிற்றலினாலேயே அவன் எப்பொருட்கும் மேலானவன் - பெரியோன் என்பது இனிது விளங்குகின்றது. எனவே, எல்லையற்று நிற்பதாகிய, 'முடிவிலாற்றல்' என்பதனாலேயே அவனது தனித்தன்மை இனிது விளங்குகின்றது. ஆதலின், 'தனக்குவமை இல்லாதான்' என்பது இறைவனது எண்குணங்களில் முடிவிலாற்றலைச் சிறப்பாகக் குறித்து நிற்பதாம். காலமும், இடமும் ஆகிய பெரும்பொருள்களின் ஆற்றலினாலோ, அவற்றின் வழிநிற்கும் ஏனைய பொருள்களின் ஆற்றலினாலோ தடுக்கப்படாத ஆற்றல் இறைவனது ஆற்றல். ஆதலின் அதற்கு எக்காலத்தும், எவ்வகையினும் முடிவு இல்லை. முடிவில்லாத இந்த ஆற்றல் வடமொழியில் 'அநந்த சத்தி' எனப்படுகின்றது. இவ் அநந்த சத்தியால் இறைவன் தனக்குவமை இல்லாதவனாய் விளங்குகின்றான்.

"மற்றாரும் தன்னொப்பார் இல்லாதானை"

(திருமுறை 6. 1-2)

"ஒப்புனக் கில்லா ஒருவனே"

(திருவாசகம் - பிடித்தபத்து - 5.)

என்பனபோல, இறைவன் தனக்குவமை இலனாதலை எடுத்தோதிப் போற்றும் திருமுறைப் பகுதிகள் பல. ஆகவே, அறநெறியிலும், அருள் நெறியிலும் ஒருபடித்தாக உள்ள இந்நிலையை உலகம் உணர்ந்து பயன்பெறுவதாக.

நவராத்திரி விழாவில்:

தருமையாதீனம் ஸ்ரீ துர்க்காம்பிகை திருக்கோயில்
தரிசனத்திற்கு எழுந்தருளியபோது

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள்
துறைசையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு
பொன்னுடை போர்த்தி மலர் மாலை அணிவித்தது.

தருமையாதீனத்திற்குச்சொந்தமான
மாயூரம் ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி தேவஸ்தானத்திற்கு
தூய்மைப் பரிசாகிய 'சுழற்கோப்பையை'

தமிழக அறநிலையத்துறை ஆணையர்,
திரு. அ. இராதாகிருஷ்ணன் M. A. B. L. அவர்கள்
வழங்குதல்

சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 27, இதழ் 10, பக்கம் 452 இன் தொடர்ச்சி)

சாதன இயல்

ஞானத்தின் சிறப்பு

மாணுக்கன் : அடிகளே, வணக்கம். பாசங்களின் இயல்புகளை ஒருவாறு விரிவாகவே விளக்கியருளினீர்கள். பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அடைதலே முத்தியாகிய பேரின்ப நிலையாதலின், பசுக்களாகிய உயிர்கள் பாசத்தினின்றும் நீங்கிப் பதியினை அடைதற்குரிய சாதனத்தின் (வழியின்) இயல்பையும் அங்ஙனம் நன்கு விரித்து அருளிச்செய்தல் வேண்டும்.

ஆசிரியர் : நல்லது அங்ஙனமே கூறுவோம்.

முத்தியாகிய பெரும் பயனுக்கு ஞானம் ஒன்றே வாயில். ஏனைய பலவும் ஞானத்தை அடைதற்கு வழியேயன்றி, மூத்திக்கு நேரே வாயிலாவன அல்ல. வேள்வி, தானம், பிற கருமங்கள், செபம், தீக்கை முதல் எவையாயினும் அவையெல்லாம் ஞானத்தைத் தந்து, பின், அது வழியாக முத்தியைத் தருமன்றி, அவையே நேராக முத்தியைத் தரமாட்டா. ஆகவே ஞானம் இல்லாமல் முத்தியை அடைதல் இயலாததாம். இங்ஙனமாகவும் சிலர், 'வேள்வியே வீட்டைத் தரும்; கருமமே வீட்டைத் தரும்; தீக்கையே வீடெய்துவிக்கும்' என்றெல்லாம் கூறுவர். அவையெல்லாம் அறியாமையின் விளைவேயாம்.

மாணுக்கன் : அவர் கூறுவனவற்றையெல்லாம் அறியாமையின் விளைவே என்றல் எப்படி ?

ஆசிரியர் : 'ஞானமே வீட்டிற்கு வாயில்' என்று கூருமல், 'ஞானமன்றி, வேள்வி, பிற கருமம், தீக்கை முதலிய பிறவும் வீட்டைத் தருதல் இயலும்' என்று கூறினுல், ஞானம் இல்லாம

லும் முத்தியடையலாம் என்பது பொருளாகிறது. ஞானம் இல்லாத பொழுது உள்ளது யாது? ஞானம் இல்லாதபொழுது உள்ளது அஞ்ஞானமே என்பது சொல்லவேண்டா. ஆகவே, ஞானத்தைப் பெருமலே வீடு அடைதல் கூடும் எனில், 'அஞ்ஞானத்தில் இருந்துகொண்டே முத்தி நிலையைப் பெறலாம்' என்பதாகிவிடும். அது பொருந்தக்கூடியதோ?

மோட்சம் அல்லது முத்தி அல்லது வீடு என்பதற்கு மறுதலையானது பந்தம் அல்லது கட்டு. பந்தம் அல்லது கட்டு என்பது யாது? அஞ்ஞானத்தால் உயிர்கள் தமது ஞானேச்சாக்கிரியைகள் (அறிவு விழைவு செயல்கள்) முற்றிலும் செயற்படாமல் அல்லது நன்கு செயற்படாமல் கட்டுண்டு நிற்பதே பந்தம் அல்லது கட்டு. அந்தக் கட்டினின்றும் விடுபடுதலே வீடு அல்லது மோட்சம் - முத்தி. ஞானம் வராதவரையில் அஞ்ஞானம் நீங்குவதில்லையாகையால், ஞானம் வாராதவரையில் கட்டு நீங்க வழியில்லை. எனவே, ஞானம் வாராதவரையில் முத்தியும் கிடைக்க மாட்டாது என்பது முற்றிலும் உண்மை. அதனால், 'ஞானமன்றிப் பிறவகையினலும் முத்தியைப் பெறலாம்' என்பவரது கூற்று, மேற்கூறிய உண்மையை உணராமல் கூறும் கூற்றேயாகின்றது.

இன்னும் அஞ்ஞானம் இருள்போன்றது; ஞானம் ஒளி போன்றது. ஒளிவந்தாலன்றி இருள் நீங்காது. அதுபோல, ஞானம் வந்தாலன்றி அஞ்ஞானம் நீங்காது. ஒளிவந்தபொழுது இருள் தானே நீங்கிவிடுதல்போல, ஞானம் வந்தபொழுது அஞ்ஞானம் தானே நீங்க, முத்தி எளிதில் கைகூடுவதாகும். ஆகவே, ஞானம் தவிர மற்றெதுவும் முத்தியை நேரே பயப்பதாகாது என்பதை நன்குணர்ந்துகொள்க. இதனைப் பின்வரும் சிவஞான சித்திச் செய்யுள் நன்குணர்த்துகின்றது.

'ஞானத்தால் வீடு' என்றே நான்மறைகள், புராணம்,
நல்ல ஆகமம் சொல்ல, 'அல்லவாம்' என்னும்
ஊனத்தார் என்கடவர்? அஞ்ஞானத்தால்
உறுவதுதான் பந்தம்; உயர் மெய்ஞ்ஞானந்தான்
ஆனத்தால் அதுபோவது; அலர்கதிர்முன் இருள்போல்
அஞ்ஞானந்தான் விட, பந்தம்அறும்; முத்திஆகும்.'

மாணுக்கன்: அடிகள் கூறியது உண்மையே. ஆயினும், வேதம், ஆகமம், புராணம் முதலியவற்றில் சில கருமங்கள்,

விரதங்கள் முதலியவற்றைக் குறிப்பிட்டு 'இக் கருமத்தைச் செய்தோர் வீடுபெறுவர்; இவ்விரதத்தை அனுட்டித்தவர் வீடு பெறுவர்' என்றும், தல புராணங்கள் சில மூர்த்தி தலம் தீர்த்தங்களைக் குறிப்பிட்டு, 'இம் மூர்த்தியைத் தரிசித்தோர் முத்தி அடைவர்; இத் தலத்தில் தங்கினோர் முத்தி அடைவர்; இத் தீர்த்தத்தில் முழுகினோர் முத்தி அடைவர்; இவ்விடத்தில் தானம், செபம் முதலியவற்றைச் செய்தோர் முத்தி அடைவர்' என்றும் கூறக் காண்கின்றோம். இன்னும் சிவாகமங்கள், 'நிருவாண தீக்கை முத்தியைத் தரும்' என்று கூறுகின்றன. இவையெல்லாம் எங்ஙனம் பொருந்துகின்றன?

ஆசிரியர்: அறியாது வினவினாய்; எங்ஙனம் எனில், அவற்றிற்கெல்லாம், 'அவை ஞானத்திற்கு வாயிலாய் அமைந்து ஞானத்தைத் தோற்றுவித்துப் பின் ஞானம் வாயிலாக முத்தியைத் தரும்' என்பதே கருத்தன்றி, 'ஞானம் இன்றித் தாமே முத்தியைத் தரும்' என்பது கருத்தன்று ஆதலின். மேல் நீ குறித்த பகுதிகள் பலவற்றிலும் ஓரிடத்திலாயினும் 'ஞானம் இல்லாமல் இவையே முத்தியைத் தரும்' என்று கூறப்படாமையால், அவை அனைத்திற்கும் நாம் இங்குக் கூறியதே கருத்தாதல் அறிந்துகொள்க. மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலிய பலவும் ஞானத்தைக் கொடுத்து, அதுவழியாக முத்தியைக் கொடுக்கும் என்பதை,

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்குஓர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்று விளக்கினார் தாயுமானவர்.

ஞானம் வருதற்கு வழி

மாணாக்கன்: நல்லது! அடிகள் வாக்கால், அடியேன் உண்மையை உணர்ந்தேன். ஞானம் ஒன்றே வீடுபேற்றிற்கு வழியாயின், ஞானம் வருவது எங்ஙனம்? அது வருமாற்றினை அடிகள் அருளிச் செய்தல் வேண்டும்.

ஆசிரியர்: நன்று! நீ வினவியவாறே ஞானம் வருமாற்றினைக் கூறுவோம்.

மல பரி பாகம்

ஞானம் வருதற்கு, முதற்கண், அந்த ஞானத்தைப் பெறுதலில் வேட்கை உண்டாதல் வேண்டும். பசி இல்லாதவனுக்கு

உணவு பயன் தருவதாகாது. நீர்வேட்கை இல்லாதவனுக்கு நீர் பயன் தருவதாகாது. அவைபோல, ஞான வேட்கை இல்லாதவனுக்கு ஞானம் பயன்படாது. ஆகவே, ஞானம் வருதற்கு முதற்கண் அதனைப் பெறுவோனிடத்தில் அதுபற்றிய வேட்கை உண்டாதல் வேண்டும்.

ஞானத்தில் வேட்கை உண்டாகாதபடி உயிர்களின் அறிவைத் தடுத்துவைத்திருப்பது, அவற்றில் செம்பிற் களிம்பு போல அநாதியே கலந்துள்ள ஆணவ மலமாகும். அந்த ஆணவ மலம் என்றும் அழிவதில்லை. ஆயினும், அது சடமாதலின், உயிர்களின் அறிவைப் பிணித்து வைத்திருக்கும் அதனது ஆற்றல் அதனது மறுதலைப் பொருள்களின் ஆற்றலால் நாளடைவில் மெலிவடைந்து, பிணிக்கும் நிலையினின்று நீங்குவதாகும். அந்நிலை 'மல பரிபாகம்' எனப்படுவது. சித்துப் பொருளின் ஆற்றல் மெலிவடையாமையும், சடப்பொருள்களின் ஆற்றல் மெலிவடைவதும் இயல்பாகும்.

ஆணவ மலம் இவ்வாறு பரிபாகமாதற் பொருட்டே இறைவன் அதற்கு மறுதலைப் பொருள்களாகிய கன்மம், மாயை என்பவற்றை உயிர்களுக்குக் கூட்டிப் பிறப்பிறப்புக்களில் சென்று கன்மங்களை ஈட்டி, அவற்றின் பயனாகிய இன்பத் துன்பங்களை நுகரச் செய்கின்றான். இச்செயற்பாடுகளால் மறைக்கும் தன்மையுடைய ஆணவ மலத்தின் சத்தி அதனைச் செய்யமாட்டாது மெலிவை அடையும். அங்ஙனம் மெலிவடைதலாகிய மலபரிபாகம் வந்தால், இருவினை ஒப்புத் தோன்றும்.

இருவினை ஒப்பு

மாணாக்கன் : இருவினை ஒப்பாவது யாது?

ஆசிரியர் : இருவினையொப்பாவது யாது என்னும் வினாவிற்குப் பலர் பலவகையாக விடைகூறுவர். அவற்றுள் ஒன்று - 'ஒருவன் செய்த நல்வினை, தீவினை என்ற இருவகை வினைகளும் தம்முள் சமமாகும் நிலை வாய்த்தல்' என்பது. இஃது இயலாத ஒன்று.

இனி மற்றொரு விடை ;- 'ஒருவன் செய்த நல்வினைகளில் மிகப் பெரியதொன்றும், தீவினைகளில் மிகப் பெரியதொன்றும் ஒரு நேரத்திலே பயன்தர வரும் நிலை உண்டாதல். அந்நிலை உண்டாகுமானால், சுந்தோபசுந்த நியாயமாக அவைகள் தமக்

குள் ஒன்றை ஒன்று அடிக்க, இரண்டும் கெட்டொழியும். அவ்வாறு ஒழியவே, செய்தவனை எதுவும் வந்து தாக்காதொழியும், என்பது. இஃதும் இயலாததொன்றே. இயல்வதாகவே வைத்துக் கொண்டாலும், மேற்குறித்த இரண்டு வினைகளும் மேற்கூறிய வாறு கெட்டொழிந்தாலும், அவற்றை அடுத்து நிற்கும் வினைகள், தம்மைச் செய்தவனை வந்து தாக்கத் தடை இல்லை. எனவே இவையெல்லாம் இருவினை ஒப்பாகா. மற்று எது இருவினையொப்பு எனின், ஒருவன் தான் செய்த நல்வினைப் பயனாகிய இன்பத்திலும், தீவினைப் பயனாகிய துன்பத்திலும் உள்ளம் வேறுபடாது - அஃதாவது, இன்பத்தில் விருப்பமும், துன்பத்தில் வெறுப்பும் இல்லாது, இரண்டையும் சமமாக நுகரும் நிலையை எய்துவதாம். இந்நிலையையே, 'ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குதல், செஞ்சாந்து எறியினும், செத்தினும், போழினும் ஒருவகையாகவே இருத்தல்' என்பன போன்றவற்றால் விளக்கு வார்கள்.

சத்திநிபாதம்

இவ்வகையான இருவினையொப்பு வாய்ப்பின், சத்திநிபாதம் உண்டாகும். சத்திநிபாதமாவது, திரோதானமாய் நின்று மறைப்பைச் செய்துவந்த இறைவனது சத்தி, மலம், பரிபாகம் உற்றநிலையில் அருட்சத்தியாகவே மாறி, ஆன்மாவினிடத்துப் பதிதல். இது பற்றிப் பாச இயலில் திரோதான மலம் பற்றிக் கூறிய இடத்தில் சொல்லப்பட்டது. நிபாதம் - வீழ்ச்சி. 'சத்தி பதிதல்' என்றது, 'வீழ்ச்சி' எனக் கூறுதல். ஓர் அவையிடைக் கல் வந்து விழுமாயின், அங்குள்ளார்க்கு அஃது ஓர் அதிர்ச்சியை உண்டாக்குதல்போல, திரோதன சத்தி அருட் சத்தியாகிப் பதியும்பொழுது, அப்பதிவு ஆன்மாவிற்கு உலகியலில் ஓர் அதிர்ச்சியை உண்டாக்குதல் பற்றியாம் என்க. இச் சத்திநிபாதம், 'மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம்' என நால் வகைப்படும்.

[தொடரும்]

கலைவளர் மாளிகை

திரு. அ. கலியபெருமாள் M. A.

(மலர் 27, இதழ் 10 பக்கம் 463 இன் தொடர்ச்சி)

மாலையில் செவ்வழி இசைத்தலைக் கலித்தொகையாலும் அறியலாம். தலைவி ஒருத்தியைக் காதலித்துப் பின் வரைந்து கொள்ளாது பிரிந்து வெளிநாடு சென்றுவிட்டபின், பிரிந்து சென்றவனை நினைத்துப் பலவாறு புலம்புகிறாள் தலைமகள். மாலைப்போது வருகிறது; கழியிலே மலர்ந்த பூக்கள் வாடிக் குவிகின்றன - காதலனை எண்ணிக் கன்னியின் உள்ளம் குவிவது போல. ஆயர்குழல் இரங்கற் பண்ணை எழுப்புகிறது - இரங்கும் அவள் நெஞ்சைப்போல. செவ்வழிப் பண்ணின் இசை பரவுகிறது - தலைவியின் தளர்ந்த சொற்களைப்போல.

"நினையும் என் உள்ளம்போல் நெடுங்கழி மலர்கூம்ப
இனையும் என் நெஞ்சுபோல் இனங்காப்பார் குழல்தோன்றச்
சாயஎன் கிளவிபோல் செவ்வழி யாழிசை நிற்பப்
போய என் ஒளியேபோல் ஒருநிலையே பகல்மாயக்
காலன் போல் வந்த கலக்கத்தோடு என்தலை
மாலையும் வந்தன்று இனி" (கலித்தொகை 143)

மாலைப்போது; மடிகளில் பால்பிலிற்றக் கன்றுகளை அழைத்தவாறு பசுக்கள் மன்றுநோக்கி வந்துகொண்டிருக்கும். "இத்தகு மாலையிலும் தலைவர், எம்மை நினையாராயின் காலையில் எந்நிலையை அடைவோமோ" என்று தலைவி பாணனை நோக்கி வருந்திக் கூறுகிறாள். அவளுக்குப் பதில்கூற இயலாது அவன் யாழில் செவ்வழிப் பண்ணை மெல்ல இசைக்கிறான்,

"மாலையும் உள்ளா ராயின் காலை
யாங்காகுவம் கொல் பாண என்ற
மனையோள் சொல்லெதிர் சொல்லல் செல்லேன்
செவ்வழி நல்யாழ் இசையினென்" (அகம் 14)

இப்பாடலால் மாலைக் காலத்தே பாணர் செவ்வழிப் பண் இசைப்பதை அறிகிறோம். நள்ளியின் பெருங்கொடையால் வரலாற்று முறைமை மறந்து மாலையில் இசைக்க வேண்டிய செவ்வழியைப் பாணர் காலையில் இசைத்தனர் என்பதை முன்னரே கண்டோம்

" சீறியாழ் செவ்வழி பண்ணினின் வன்புல
நன்னாடு பாட " (புறம் 146)

" சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததைக்
கார்வான் இன்னுறை தமியள் கேளா " (புறம் 147)

" பையுள் நல்யாழ் செவ்வழி வகுப்ப " (அகம் 214)

' நயவன் தைவரும் செவ்வழி நல்யாழ்
இசை யோர்த்தன்ன இன்தீங்கிளவி " (அகம் 212)

என்பனபோன்ற அடிகளால், தமிழரால் செவ்வழிப் பண் இசைக்கப்பட்டது நன்கு விளங்கும்.

யாழை, இடப்பக்கத்தே தழுவி இசைப்பர். இதனை, "இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ' என்ற சிறுபாணாற்றுப் படையாலும்,

" பொன்வார்ந்தன்ன புரியடங்கு நரம்பின்
தொடையமை கேள்வி இடவயின் தழீஇ "

என்ற பெரும்பாணாற்றுப் படையாலும் அறியலாம். யாழை இடப்பக்கம் தழுவி அமர்ந்து வாசிக்கும் நிலைகள் ஒன்பது உண்டு. பதுமகம், உற்கட்டிதம் ஒப்படியிருக்கை, சப்புடம், அயமுதம், சுவத்திகம், தளிப்புடம், மண்டிலம் ஏகபாதம் ஆகியவையே ஒன்பது வகை இருப்பு அல்லது விருத்தியாம். ஒன்பது வகை விருத்தியுள் தலைக்கண் விருத்தியில் - பதுமாசனத்தில் இருந்து மாதவி யாழ்வாசித்தாள் என்பதை வேனிற்காதையால் அறிகிறோம்.

" ஒன்பான் விருத்தியுள் தலைக்கண் விருத்தி
நன்பாலமைந்த இருக்கையளாகி " (வேனிற் 25 . 26)

இசைத்தற்கு முன்னர் யாழைத் திருத்துவதுபற்றி இளங்கோவடிகள் கானல்வரியில் கூறுகிறார். வெயில், காற்று, நீர், நிழல் இவைகளால் வரும் குற்றம் நீங்கிய யாழைத்தொழுது வாங்கித் திருத்துகிறாள் மாதவி. பண்ணல், பரிவட்டனை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு என்று கூறப்படும் எட்டுவகையால் இசையெழுப்பிப் பண்கூற்றில் குற்றம் தீர்ந்து விரல்கள் நரம்பின்மேற்படர, வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை என இசைவல்லவன் வகுத்த எட்டுவகை இசைத்தொழில்களாலும் யாழைத் தன்செவியாற் கேட்டு ஆராய்ந்தறிந்து திருத்திக் கோவலனிடம் யாழை நீட்டுகிறாள்.

"பண்ணல் பரிவட்டனை ஆராய்தல் தைவரல்
கண்ணிய செலவு விளையாட்டுக் கையூழ்
நண்ணிய குறும்போக் கென்றநாட்டிய
எண் வகையால் இசை எழீஇ
பண்வகையால் பரிவு தீர்ந்து
மரகத மணித்தாள் செறிந்த மணிக்காந்தள் மெல்விரல்கள்
பயிர் வண்டின் கிளைபோலப் பன்னரம்பின் மிசைப்படர
வார்தல் வடித்தல் உந்தல் உறழ்தல்
சீருடன் உருட்டல் தெருட்டல் அள்ளல்
ஏருடைப் பட்டடை யென இசையோர்வகுத்த
எட்டுவகையின் இசைக்கரணத்துப்
பட்டவகைதன் இசையின் ஓர்த்து
ஏவலன் பின்பாணி யாதெனக்
கோவலன் கை யாழ் நீட்ட" (கானல்வரி 5 - 18)

இதனுள் வார்தல் முதலிய எட்டும், பண்ணல் முதலிய எட்டும் இசைக் கரணங்களாம். பரிமேலழகரும் 573-ம் குறளின் உரையில் "பாடற்றொழில் களாவன - யாழின்கண் வார்தல் முதலிய எட்டும் பண்ணல் முதலிய எட்டும்" என்று குறிப்பிட்டுள்ளார் பண்ணல் முதலான இசையெழுப்பும் எண் வகைக் கரணங்களை விளக்க முற்படின் விரியும். ஆகவே அவற்றின் விளக்கங்களைக் கானல் வரியில் அரும்பத உரையில் கண்டு கொள்க.

இசைக்கரணங்கள் வார்தல் முதலாகும் எட்டனுள், வார்தல் என்பது சுட்டுவிரல் செய்தொழிலாம். சுட்டுவிரலும் பெருவிரலும் கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராய்தல்

வடித்தலாம். உந்தல், நரம்புகளைத் தெறித்து வலிவிற்பட்டதும் மெலிவிற் பட்டதும் நிரலிழி பட்டதும் என்றறிதலாகும். ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட்டும் ஆராய்தல் உறழ்தலாம். இந்நான்கு கரணங்களையும் பொருநராற்றுப்படையில் முடத்தாமக்கண்ணியார் குறிக்கக் காண்கிறோம்.

" ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை
வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும் "
(பொருந. 21 - 23)

வாரியும் என்பதற்கு நரம்புகளைக் கூடத்தழுவியும் என்றும், வடித்தும் என்பதற்கு உருவியும் என்றும், உந்தியும் என்பதற்குத் தெறித்தும் என்றும், உறழ்ந்தும் என்பதற்கு ஒன்றைவிட்டு ஒன்றைத்தெறித்தும் என்றும் நச்சினார்க்கினியர் உரை எழுதுகிறார்.

குற்றமற யாழிசைக்கும் வகைகூறும் நூல்கள் அக்காலத்தே இருந்திருக்க வேண்டும். யாழ்நூலில் கூறியவாறு பேரியாழைப் பிறழாது பொருந்த, வேந்தர் விருப்பிக் கேட்குமாறு இசைத்தனராம் பாணர்.

" பேரியாழ், அமைவரப் பண்ணி அருள்நெறி திரியாது
இசைபெறு திருவின் வேத்தவை ஏற்பத்
துறைபுல முற்றிய பைதீர் பாணர் ' (மலைபடு. 38-40)

யாழ் இசைக்க முற்படுவார் முன்னர்க் கூறிய ஒன்பான் விருத்தியுள் யாதானும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அவ்விருத்தியில் இருந்து யாழை இடப்பக்கம் இருத்தி, வலக்கையைப் பதாகையாகக் கோட்டின்மேல் வைத்து இடக்கை நால்விரலால் மாடகத்தைத் தழுவிக்கொள்ள வேண்டும் பதாகை என்பது பெருவிரல் குவித்து ஏனைய விரல்கள் நிமிர்த்திருத்தலாம். செப்பகை, ஆர்ப்பு, கூடம், அதிர்வு என்று கூறப்படும் நான்கு பகை நரம்பும் நீக்கி முறைமையறிந்து வாசித்தல் வேண்டும். செம்பகை இன்பமின்றி இசைத்தலாம். ஓங்க இசைத்தல் ஆர்ப்பாகும். கூடம், பகை நரம்புள் பட்டு இசைநிறவாதது. நரம்பைச் சிதற உந்தல் அதிர்வாகும்.

முறைப்படி மாதவி யாழ் வாசிப்பதை வேனிற்காதையில் காணலாம்.

' ஒன்பான் விருத்தியுள் தலைக்கண் விருத்தி
நன்பாலமைந்த இருக்கைய ளாகி
வலக்கைப் பதாகை கோட்டொடு சேர்த்தி
இடக்கை நால்விரல் மாடகம் தழீஇச்
செம்பகை ஆர்ப்பே கூடம் அதிர்வே
வெம்பகை நீக்கும் விரகுளி அறிந்து
பிழையா மரபின் ஈரேழ் கோவையை
உழைமுதற் கைக்கிளை இறுவாய்க்கட்டி
இணைகிளை பகை நட்பு என்றிந் நான்கின்
இசைபுணர் குறிநிலை எய்த நோக்கிக்
குரல்வா யுள்வாய்க் கேட்டனள் ''

(வேனிற்கான 25 - 35)

வலிவு, மெலிவு, சமம் என மூன்றுதானத்திலும் ஒவ்வொன்றில் ஏழு தானம் முடித்துப்பாடத் துறைகள் இருபத்தொன்றும். ''துறைபல முற்றிய பைதீர் பாணர்'' (மலைபடு 40) என்னும் அடியில் ''துறைபல'' என்பது மூன்ற தானத்திலும் ஒவ்வொன்றில் ஏழுதானம் முடித்துப்பாடும் இருபத்தொரு துறைகளைக் குறிக்கும் புறநானூற்றிலும் வன்பரணர் வல்வில்லோரியைப் பாடிய பாடலில் இருபத்தொரு துறைகளைப்பற்றிக் குறிப்பிட்டு உள்ளார்.

'' மூவேழ் துறையும் முறையுளிக் கழிப்பிக்
கோவெனப் பெயரிய காலை '' (புறம். 152; 20 - 21)

சிலப்பதிகாரத்தில், பண்களுக்கு இன்றியமையாத இருபத்தொரு திறத்தையும் குற்றமற இசைத்துக் காட்டவல்ல பாணரை

'' குழலினும் யாழினும் குரல்முதலேழும்
வழுவின்றிசைத்து வழித்திறம் காட்டும்
அரும்பெறல் மரபிற் பெரும்பாண் ''

(சிலப்பு. 5, 35 - 37)

என்னும் அடிகள் மூலம் சந்திக்கிறோம்.

பண்டைத் தமிழகத்தில் இசையெழுப்பும் பல்வேறு தோற் கருவிகள் இருந்தன. பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை,

கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, கிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தருணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பாறை, துடி, பெரும்பாறை முதலிய தோலாற் செய்யப்பட்ட கருவிகளை அடியார்க்கு நல்லார் உரையிலிருந்து அறிகிறோம். தண்ணுமை, முழவு முதலிய கருவிகள், நாட்டியம் நடைபெறுங்காலை இசைக்கப்படும் என்பதைச் சிலப்பதிகாரத்துள் அரங்கேற்றுகாதையால் அறிந்து கொள்ளலாம். மத்தளம், சிறுபறை, கஞ்சதாளம், தூம்பு, கரடிகை, சல்லிகை, பதலை முதலிய வாச்சியங்களைப்பற்றி மலைபடுகடாம் கூறுகிறது.

" திணைவார் விசித்த முழவொடு ஆகுளி
நுண்ணுருக் குற்ற விளங்கடாப் பாண்டில்
மின்னிரும் பீலி அணித்தழைக் கோட்டொடு
கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பின்
இளிப்பயிர் இமிரும் குறும்பரந் தூம்பொடு
விளிப்பது கவரும் தீங்குழல் துதைஇ
நடுவு நின்றிசைக்கும் அரிக்குரல் தட்டை
கடிகவர் பொலிக்கும் வல்வாய் எல்லரி
நொடிதரு பாணிய பதலையும் பிறவும் "

(மலைபடு. 3 - 11)

இவற்றுள் மத்தளம் இசைபிறக்கும் கருவிகளுக்கெல்லாம் தளமாகும். "மத்" என்ற ஓசைப்பெயரோடு கூடி மத்தளம் எனப் பெயர்பெற்றது. சல்லிகை 'சல்" என்ற ஓசை உடை உடையது. கரடி கத்தினாற்போன்ற ஓசையை எழுப்புவது கடிகையாம். முழவு, தும்பு, சல்லி, சிறுபறை, ஒருகண்மாக்கிணை முதலிய கருவிகள் புறநானூற்றுப் பாடலில் குறிக்கப் படுகின்றன.

" மண்முழா அமைமின் பண்யாழ் நிறுமின்
கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமின்
எல்லரி தொடுமின் ஆகுளி தொடுமின்
பதலை ஒருகண் பையென இயக்குமின் "

(புறம் 152; 14 - 17)

(தொடரும்)

திருத்தொண்டர் வரலாறு

திருநெறிச்செம்மல்
வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர்.

(மலர் 27, இதழ் 9, பக்கம் 429 இன் தொடர்ச்சி)

(11) குங்குலியக்கலய நாயனர் :

சோழவளநாட்டில் திருக்கடவூரில் அந்தணர் குலத்தில் குங்குலியக்கலயனர் என்ற இப்பெரியார் வாழ்ந்துவந்தார். சிவ பெருமானுடைய திருவடிகளை நாடோறும் வணங்கும் நியம முடையவராய் அமுதகடேசர் திருக்கோயில் சென்று பெருமா னுக்குக் குங்குலியத்தூபம் இடும் திருத்தொண்டைச் செய்து வந்தார். அதனல் இவரை எல்லோரும் குங்குலியக்கலயர் என்றே அழைத்தனர்.

வறுமை :

சிவப்பணி புரிந்துவந்த இக் கலயனர் இறைவன் திருவரு ளால் வறுமையடைய நேர்ந்தது. ஆயினும் இறைவனுக்குச் செய்யும் திருப்பணியைத் தவருது செய்துவந்தார். வறுமை மிகுதியினல் நிலங்களையெல்லாம் விற்ருர். பொருள்கள் யாவும் சிறிது சிறிதாக அழிந்தன. உற்ருரும் மக்களும் வறுமையில் வாடினர்.

தாலியை விற்றல் :

உணவுப்பொருள் இன்றி குழந்தைகளும் உறவினர்களும் வருந்தினர். இந்நிலையில் கலயனரின் மனைவி தம் கணவரை அழைத்து தம் கழுத்திலிருந்த மங்கலத் தாலியைக் கழற்றிக் கலயனர் கையில் கொடுத்து அதனை விற்று நெல் வாங்கி வருமாறு அனுப்பினர். கலயனரும் அதைப் பெற்றுக்கொண்டு நெல் வாங்கிவரப் புறப்பட்டார்.

குங்கிலியம் வாங்கல் :

வழியில் ஒருவணிகன் குங்குலியப் பொதி சுமந்து எதிரே வந்தான். அதைக்கண்ட கலயர் மகிழ்ந்து தாலியை அவன் கையில் தந்து அப்பொதியனைத்தையும் பெற்றுத் திருக்கோயி லுக்குச் சென்று குங்கிலியத் தூபம் புகைத்து இறைவனை வழி பட்டுக் கோயிலிலேயே தங்கினர். அன்றிரவு கலயனாரின் மனைவி மக்கள் பசியால் வாடி அயர்ந்து உறங்கினர். அப் போது இறைவன் திருவருளால் குபேரன் பெருஞ் செல்வங் களைக் கலயனார் வீட்டில் நிரப்பினன். பொன்னும் மணியும் நெல்லும் பிறவுமாக வீட்டில் செல்வங் கொழித்தது. இறைவன் கலயர் மனைவி கனவில் தோன்றி செல்வம் நிறைவித்ததை உணர்த்தியருளினர். எழுந்த அவ்வம்மையார் மகிழ்ந்து கண வருக்கு இனிய விருந்து சமைக்க முற்பட்டார்.

கோயிலில் பசித்துக்களைத்த நிலையிலும் தூபப்பணிசெய்து கொண்டிருந்த கலயனார் கேட்க ஓர் அசரீரி எழுந்தது. 'மிகப் பசித்திருக்கும் நீ உன் இல்லம்சென்று பாலொடு கலந்த இனிய உணவுண்டு வருக' என்ற அசரீரியைக் கேட்ட கலயர் இறை வன் கட்டளையை ஏற்றுத் தம் இல்லம் சென்றார். செல்வம் கொழிக்கும் தம் மனைவியைக் கண்டு வியந்த நாயனர் தம் மனைவியாரைப் பார்த்து இவை எவ்வாறு உண்டாயின என்றார். அம்மையார் நீலகண்டர் அருள்தர வந்த ஆக்கம் என்றார். கலயர் திருவருளை வியந்து வாழ்த்தித் தொண்டுசெய்து மகிழ்ந் திருந்தார்.

அன்பின் ஆற்றல் :

கலயனார் கடவூரில் வாழ்ந்து வந்த காலத்தே திருப்பனந் தாளில் சாய்ந்திருந்த சிவலிங்கத்தினை நிமிர்த்த சோழமன்னன் ஒருவன் முயன்று முடியாது வருந்தியிருந்தான். தாடகையின் துயர் துடைக்கச் சாய்ந்த இச்சிவலிங்கம் நெடுங்காலம் வரை சாய்ந்திருந்தது. அதனை நிமிர்த்த முயன்ற சோழனது முயற்சி கள் யாவும் பயன்தரவில்லை. இதனைக் கேள்வியுற்ற கலயர் திருப்பனந்தாளை யடைந்தார். தானும் இம்முயற்சியில் ஈடு பட்டுத் தானும் வருந்தல் வேண்டுமென்று விழைந்தார். பூங்கச்சோடு கூடிய வலியகயிற்றைத் தம் கழுத்தில் கட்டிக் கொண்டு வருந்தி இழுத்தார். கலயனாரின் அன்புக்குப் பெருமான்

ஆட்பட்டான். சாய்ந்திருந்த சிவலிங்கம் நேரே நிமிர்ந்தது. தேவர்கள் மலர் மழை பொழிந்தனர். மன்னனும் மக்களும் மகிழ்ந்தனர். கலயனாரைத் துதித்து வழிபட்டனர். சோழன் கோயில் திருப்பணிகள் பலவும் செய்துவிட்டுத் தம்நகர் சென்றான். கலயரும் கடவூர் வந்து தூபப்பணி செய்து வாழ்ந்து வந்தார்.

கடவூரில் ஞானசம்பந்தரையும் நாவுக்கரசரையும் எதிர் கொண்டழைத்து வணங்கித் தம் வீட்டிற்கு அழைத்துச் சென்றுபசரித்து அவர்களுடைய வாழ்த்தைப் பெற்றார். இவ்வாறு கலயனார் இறைவனிடத்தும் அடியார்களிடத்தும் நீங்கா அன்பு செலுத்தி விடைபெற்று இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

விசேஷ நாட்கள்

10—10—68 முதல் 10—11—68 முடிய

19—10—68	பிரதோஷம்
20—10—68	ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்மநக்ஷத்திரவிழா
21—10—68	தீபாவளி பண்டிகை, சோமவார அமாவாசை.
22—10—68	மெய்கண்ட தேவர் திருநக்ஷத்திரம்
24—10—68	பூசலார் நாயனார் ,,
26—10—68	ஐயடிகள் காடவர்கோன் ,,
27—10—68	ஸ்கந்த ஷஷ்டி
2—11—68	பிரதோஷம்
4—11—68	அன்னாபிஷேகம், திருமூலநாயனார் திருநக்ஷத்திரம்
5—11—68	நெடுமாறநாயனார் ,,
6—11—68	வேளூர்க் கிருத்திகை, இடங்கழி நாயனார் ,,
11—11—68	சத்திநாயனார் திருநக்ஷத்திரம்.

சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான்,

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 27, இதழ் 10, பக்கம் 471 இன் தொடர்ச்சி)

ஆன்மாக்களுக்கு கேவலம், சகலம், சுத்தம் என்ற மூன்ற வத்தை ஆணவம் மாயை சிவசத்தியால் முறையே வரும்.

இவற்றுள் கேவலாவஸ்த்தையாவது :

தேகாதிகள் (எல்லாம்) ஒன்றும் அற்று குணம் அற்று. தொழில் அற்று போகம் அற்று கர்த்தா ஆகை அற்று மைக்குள் மணிபோல ஆணவ மலத்தினுலே மூடப்பட்டு ஓர் அறிவும் அற்று வியாபியாய் இருக்கும் அவஸரமாம்.

ஸகலாவஸ்த்தையாவது :

பஞ்சகோசபத்தனய் அதனலே பரிச்சின்னன் ஆகி கிஞ்சிக்ஞ னய் அனுதிகன்மத்திற்கு ஈடாய் அனேக யோனிகளிலும் சஞ்ச ரித்து விடயங்களைப் புசிக்கும் அவஸரமாகும்.

சுத்தாவஸ்த்தையாவது :

இருவினையொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமும் வந்த காலத்து, சரியை கிரியை யோக ஞானபாதங்களை உணர்ந்த குருகடாக்ஷத்தினுலே மும்மலங்களையும் விட்டு நீங்கி சச்சிதா னந்த சிவமாக விளங்கும் அவஸரம்.

இந்த ஆன்மாக்கள் ஒருமலமுடையவர் இருமலமுடையவர் மும்மலமுடையவர் என மூன்று பிரிவை உடையவர்கள் ஆவார் கள். ஆணவமலத்தாலே தடைபட்ட ஞானக்கிரியை உடைய வர்களாதலால் சுத்த தத்துவங்களால் விளக்கப்பட்ட ஞானக் கிரியை உடையவர்களாய் ஒருமலத்தராய் இருக்கிறவர்கள் விக்ஞான கலர் என்பவர்.

இவர் ப்ரசாந்தகலுஷர் அப்ரசாந்தகலுஷர் என இருவகையுடையவர். அவர்களுக்குள் சிலருடைய மல பரிபாகத்தைப் பார்த்து சிவன் அவர்களை சுத்தாத்வாவில் அதிகாரபத்தில் வைக்கின்ருர்.

சிலரை அந்த அத்வாவில் போகத்தில் சேர்க்கிருர். அங்கு யோஜிக்கப்பட்ட அவர்கள் இஷ்டமான போகங்களை அனுபவிக்கிறவர்களாய் இறைவனின் விருப்பப்படி அதிகாரங்களில் பிரவர்த்திக்கிருர்கள்.

எவர்கள் ஈச்வரதத்துவத்தை அடைவிக்கச் செய்யப்பட்டார்களோ அந்த அதிகார குணங்களை அடைந்த மஹான்கள், சக்ரவர்த்திகள்போல குணவிசிஷ்டர்களாய் விளங்கும வித்யேச்வரர்கள் ஆவார்கள். சிலர் வித்யாதத்துவத்தை அடைந்தவர்கள் சப்தகோடி மஹாமந்திரங்கள் என அழைக்கப்படுகின்ருர்கள்.

இவர்களுள் எவருக்குத்தன்னுடைய அதிகாரத்தில் வைராக்யம் உண்டாகிறதோ அவரை அவருடைய மலபரிபாகத்திற்கேற்ப ஈச்வரன் அனுக்ரஹம் செய்து பரமமான முக்தியை அடையச்செய்தும், சதாசிவதத்துவத்தில் ஈச்வர தத்துவத்திலிருப்பவர்களையும், வித்யாதத்துவத்திலிருப்பவர்களை ஈச்வர தத்துவத்திலும் சேர்க்கிருர்.

அடுத்தபடியாக உள்ள இருமலமுடையவர்களான ப்ரளயாகலர் ஞானக்கிரியைகளைத் தடுக்கும் ஆணவமலத்தை உடையவர்களாய் கன்மமல பரிபாகத்தினுலே காலாதிகளைத் தங்கள் வசம் பண்ணிக்கொண்டு ஈச்வராத்வாவில் யோகத்திற்கு ஏதுவான கன்மத்தையும் உடையவர்களாய் இவ்வாறு ஆணவம் கன்மம் என்று இருமலத்தராய் இருப்பர்.

இந்த ப்ரளயாகலரும், பக்குவமலர் என்றும் அபக்குவமலர் என்றும் இரண்டுவிதமாவர். இதில் பக்வமலர்களை இறைவன் அனுக்ரஹம் செய்து புவனபதிகளாகச் செய்கிருர். அபக்குவமலர்களை ப்ராக்ருதமான போக கர்மவசத்தினுல் புர்யஷ்டக தேஹமுடையவர்களாய் ஆக்குகின்ருர்.

புர்யஷ்டகதேஹம் என்பது சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம், மனம், புத்தி அஹங்காரம் என்ற எட்டும் சேர்ந்த சரீரம்.

ஸகலர் என்ற ஆன்மாவும் மூன்றுவிதமாகும் :- அதாவது சாம்சித்தர், வைநயிகர், ப்ராகிருதிகர் என்று. சாம்சித்தர் என்பவர் முன் ஜென்மாவில் செய்யப்பட்ட ச்வரணம் மனனம் நிதித்தியாசனம் முதலியவைகள் செய்தும் சிவசாக்ஷாத்காரத்தை அடையாமல் சுகர் வாமதேவர் ஜடபரதர்போல் சரீரமெடுத்தவர்களாயினும் தொடர்புடைய நிதித்தியாசனத்தை உடையவர்களாதலாலே சிவனுடைய அனுக்ரஹத்தினுல் சிவனை சாக்ஷாத்கரிப்பவர்கள். வைநயிகர் என்பவர்கள் ஆசாரியனிடத்தில் வினயமுள்ளவர்களாய்க் கொண்டு தீக்ஷைபெற்று மனம் வாக்கு இவைகளால் சிவதர்மங்களைச் செய்பவர்களாய் லௌகிகமான சாத்திரங்களிலும் சிவசாத்திரங்களிலும் மிகுந்த அறிவுடைய வர்களாயிருப்பவர்கள். ப்ராக்ருதகர் என்பவர் ஸ்வப்னத்தில் கண்ட அறிவுபோல் தெரிந்தும் தெரியாததுமான அறிவை உடையவர்களாய், ப்ராகிருதசரீரத்திலும் ஆன்மாவிடத்திலும் அதிகமான பற்றுதலுடையவர்களாய் இருப்பர்.

பாசம் என்பது ஆணவம். திரோதாயி பிந்து (சுத்தமாயை) மாயை (அசுத்தமாயை) கன்மம் என ஐந்து. இதனுள் நான்கு ஜடரூபம் திரோதாயகசத்தி சித்ரூபமாகும். பாசானுக்ரஹக மாக இருத்தலால் பாசம் என விவரிக்கப்படுகிறது.

ஆணவம் என்பது :- நித்யமாய், ஒன்ருய், விபுவாய், அநாதியாய் ஆன்மாக்கள் தோறும் ஞானத்தைத் தடுக்கும் எண்ணிறந்த சத்திகளையுடையதாய் செம்பிற்குக் களிம்பு போல சகஜமாய் இருக்கும்.

இந்த ஆணவமலமானது :- மோஹம், மதம் ராகம், விஷாதம், தாபம், சோஷம், வைசித்ரியம் என ஏழு விதமாக வுள்ளது. அதனுள் மோஹம் என்பது ஆத்மாவினிடத்தில் அறியாகவுள்ளது. கூட உண்டானது மதம் முதலிய ஆறுக்கும் காரணமாகவுடையது. குருவினுலும் நூலினுலும் தீயன வென்றறிந்தவற்றில் நீங்காமலிருக்கும் மயக்கம்.

2. மதம் என்பது :- தன்னுடையது என்பதினுலே ஸ்திரீ களிடத்தில் அதிசயிக்கத்தக்க அபிமானம்.

3. ராகம் என்பது :- கிடையாத பொருளிடத்து உண்டாகும் ஆசை.

4. விஷாதம் என்பது :- அது கிடைக்காவிடில் உண்டாகும் வருத்தம்.

5. தாபம் :- என்பது, அவை குறித்துப் புலம்பல்.

6. வைசித்ரியம் என்பது :- மனைவி, மக்கள், நண்பன், பொருள் இவைகளால் தனக்குச் சமம் வேறு ஒருவரும் இல்லை என்னும் எண்ணம்.

7. சோஷம் என்பது :- இவைகள் நாசமாயின் அதனானுண்டாகும் நிலை.

திரோதாயி என்பது :- ஆணவம் சடம் ஆகையால் இந்த ஆணவ சத்திகளை சேட்டிப்பது ஞானஸ்வரூபியாகிய ஆதியாம். இந்த ஆதிசத்தியானது பாசகன்மத்திற்குப்பின் செல்லுகையால் இதையும் பாசம் என்று உபசாரமாகச் சொல்லப் படுகிறது.

சுத்தமாயையாவது ;- நித்யமாய் ஒன்றாய் ஷடத்துவாவையும் வியாபித்திருப்பதாய், சுத்தமாய், சூக்ஷ்மை முதலிய நான்கு வாக்குக்களுக்கும், சடத்துவாக்களுள்ளே மந்திரம் பதம் வன்னம் கலை என்னும் நான்குக்கும், சிவதத்துவம் முதலிய சுத்ததத்துவங்கள் ஐந்துக்கும், அவைகளில் உள்ள புவனங்களுக்கும், அந்தப் புவனங்களிலுள்ள விக்ஞானகலருக்கும், அந்தப் புவனநாயகராகிய மந்திரமகேச்வர மந்திரங்கள் என்னும் அணுசதாசிவர் ஆதியோர் தனுவாதிகட்கும் முதற்காரணமாய், சிவனுக்கு வைப்புச்சத்தி என்று சொல்லப்படும் பரிக்ரக சத்தியாய் இருப்பது. இதற்கு குண்டலி, குடிலை, மகாமாயை, ஊர்த்துவமாயை, விந்து என்பதுபோன்ற பல பரியாய பெயர்கள் உண்டு.

அந்த சுத்த மாயையிலிருந்து சூக்ஷ்மை பச்யந்தி, மத்யமை, வைகரீ என்ற நான்கு வாக்குகள் உண்டாகும். மற்றும் அதிலிருந்து சிவம், சத்தி, சாதாக்யம், ஈச்வரம், சுத்தவித்தை என்னும் தத்துவங்கள் ஐந்தும் தோன்றும்.

(தொடரும்)

" கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 27, இதழ் 10, பக்கம் 467 இன் தொடர்ச்சி)

திருமணம் (2)

கறைக்கண்டன் கடிமணக்கவின் கொள்வான் வேண்டி ஒப்பனை மண்டபத்துட் புகுந்தான். ஆண்ட நாயகனின் குறிப் புணர்ந்த அளகை நாயகன் பிரம விட்டுணுக்களாலும், மறை களாலும் முனிவோர்களாலும் தீண்ட முடியாத திருமேனி யைத் தீண்டி மங்கலக் கோலம் புனையத் துவங்கினான்.

மதுமலர்க் கொன்றையனின் புதுமணக் கோலம் :

பூந்துகிற் படாத்தை அரைக்கசைத்து அதன்மேல் இரட்டை நாண் பட்டிகையை இறுக்கினான் குபேரன். கோலம் செய்யப் பெற்ற குடுமியில் கற்பக மலர் சூட்டப் பெற்றது. நீறணிந்த திருமேனியில் தண்பனி நீரையும் மான்மதச் சாந்தக் கலவையை யும் குழைத்துப் பூசினான். இணைமணிக் குழைகளை இரண்டு செஞ்சுடர் செறிந்தாற்போல செவிகளில் அணிவித்துக் கண்டி கையை இருண்ட கண்டத்தில் சேர்த்தினான். புயங்களில் பட்டிகை, தோள்களில் வாகுவலயம், திருமார்பில் தரள மாலிகை இவற்றை அணிவித்து மந்திர பவித்திரத்தைத் திரு விரலில் இட்டான். சொற்பதங்கடந்த பெருமானின் திருவடிப் போதுகளில் கழல்களை அணிவித்துப் பேறுகொண்டான் குபேரன்.

செங்கண் மால் முதலிய இந்திராதி தேவர்களுக்கெல்லாம் மங்கலம் தரும் புனிதன் மணக்கோலம் கொண்ட பின்பு நந்தி யெம்பெருமான் மீது எழுந்தருளி நடந்தபோது சுரர்கள் பூமலர் மாரி பொழிந்தனர். முனிவர்கள் அஞ்சலி முகிழ்த்த கையின

ராய் ஆசிகள் சொல்ல இந்திரன் பொற்களாஞ்சி ஏந்த - ஈசானன் அடைப்பை தாங்க, வாயுதேவன் ஆலவட்டம் அசைக்க, மணத்தூபப் பொருள்களை வருணன் தாங்கிக் கொண்டான்.

அன்னத்தேரில் அயன் பெருமானுக்கு வலப்புறத்திலும், கருடத்தேரில் திருமால் இடப்புறத்திலும் வர மதுரை நகர் வந்தான் மதியணிந்த சடையான். மக்கள் வீதி மருங்குகளில் நின்று மணமகனும் திருமகளை வைத்தகண் வாங்காமல் பார்த்து மகிழ்ந்தனர். சிலர் தடாதகையின் தவத்தை வியக்க - மற்றும் சிலர் கொன்றைவார் சடையானே கொடுத்து வைத்தவன் எனப் பாராட்டினர். இம்மாமணம் காண நாமல்லவோ தவம் செய் தோம் என்று பலர் நெஞ்சுவந்தனர்.

நங்கையென் ஞேற்ருள் கொல்லோ
நம்பியைத் திளைத்தற் கென்பார்
மங்கையை மணப்பா னென்னே
வள்ளலு நோற்ரு னென்பார்
அங்கடி மதுரை யென்னே
வாற்றிய தவந்தா னென்பார்
இங்கிவர் வதுவை காண்பான்
என்னநா நோற்ரே மென்பார்.

இன்னும் சிலர் இதனைக் காண மலையத்துவசன் இல்லையே என வருந்தினார்கள். சிலர் காஞ்சனையின் நல்வினைப் பயனையும், சுமதியின் நல்லறிவாற்றலையும் போற்றினர்.

எழுதலாகா எழிலாளன்:

மணவாளனின் எழிலுருவம் மங்கையர்கள் மனசிறையைத் தளர்வு செய்தது. வேக விடைமேல் வரும் வேதியன் தன்னருகு வந்தபோது விரைந்து சென்றுவிட்டானே என வருந்திய ஓர் ஆரணங்கு அங்கு வந்த ஓவத் தொழில் வல்லான் ஒருவனைப் பார்த்து 'இவனை நீ எழுதித்தா' என்னிடம் உள்ளன எல்லாம் தருவேன் என்ருள். அவனை யார் எழுதவல்லார்? என்று அவன் திரும்பக் கேட்டபோது ஆவி தளர்ந்து சோர்ந்தாள்.

கவனமால் விடையான் தன்னைக்கடைக்கணித்திலனென் றங்கோர்
கவணவான் கொடியோ ரோவத்தொழில்வல்லான் குறுகநோக்கி
இவனை நீ எழுதித்தந்தால் வேண்டுவ ஈவ னென்ருள்
அவனையா ரெழுத வல்லா ரென்றன ளாவி சோர்ந்தாள்.

இன்னொருபெண் மணமகனும் பிறைமுடிப் பெருந்தகையின் அருகே வரும் பிரமன் - திருமால், விண்ணோர் - மண்ணோர் யாரையுங் காணாமல் ஞானப் புலத்தவர் போலக் கண்ட பொருளெல்லாம் மழுமான் ஏந்திய செங்கைத் தலத்தவனாகவே கண்டாள்.

காஞ்சனமாலை காண கருணைபூத்தான் :

மாளிகையை நெருங்கிவரும் மணமகனை முனிபத்தினியர்கள் வரவேற்று ஆரத்தி எடுத்தனர். அரம்பையர்கள் தீபங்காட்ட, வேதச் செல்வர்கள் சுவத்திகள் (மங்கல வசனம்) ஓதினர். மாலும், அயனும் நீட்டும் மலர்க்கரங்களைப் பற்றியவாறு விடையினின்றும் இறங்கிய மங்கள மூர்த்தியை காஞ்சன மாலை வரவேற்று கங்கா தீர்த்தத்தால் திருவடி விளக்கினாள். அத் தூய நீரைத் தன் தலைமிலசக் கொண்டாள். பட்டினாலே பாதம் துடைத்து மந்தாரப் பொன் மலரைச் சூட்டி நின்று அருமையால் அடியேன் பெற்ற அணங்கினை வதுவை செய்வதோடு கூட இக் கன்னித் தேயத்தினையுங் கைக்கொண்டருள்க' என்று விண்ணப்பித்தாள். தெய்வ நாயகன் மென்முறுவல் செய்து முடியசைத்தான். மணவோரை நெருங்கும்வரை தபனிய மலர்க் கொம்பன்னாரின் காமரு நடனங்களில் கருத்துச் செலுத்தியிருந்தான்.

கோமகள் புனைந்த வதுவைக் கோலம் :

செம்மலர்த் திருவும், வெள்ளைச் செழுமலர்த் திருவும் தங்கள் கைம்மலரின் தவம் வியப்பார் போல தடாதகைக்கு அழகுசெய்ய முந்தினர். சந்தனம் பூசி, பனிநீரில் நீராட்டி, காலில் கிண்கிணி பூட்டினர். மேகலை - காஞ்சி இடையை விளக்க காந்தளம் பூவிலே வண்டிருப்பதுபோல பொன்மணி யாழியை மென்விரலிலே சேர்த்தார்கள். கடகம் - தொடி இவற்றைத் தோள்களில் அணிவித்து; மரகதம். பொன் - பவளம் ஆகிய மாலைகளை வானவில்லெனத் திருமார்பில் இணைத்தனர். அம்மையின் குழற்காட்டில் மலர் மாலையைச் சூட்டியது அவளது திருக்குமாரன் உக்கிரகுமாரபாண்டியன் முகில்களைத் தளையிட்டதுபோல இருந்தது என்கிறார் பரஞ்சோதியார். முக்கட் புனிதனுக்கு ஈறிலா மகிழ்ச்சி தோன்ற அம்மை பூத்த புதுமலர்க் கொடியென நின்றாள். பூவின் கிழத்தியும், சொற்

கலையாளும் நங்கையைச் சோபனமென்று வாழ்த்தி மலர்க்கை யைப் பிடித்து மண மண்டபமழைத்துச் சென்றனர். திலோத் தமை ஆடிபிடிக்க - வீரமகள் பொற்பிரப்பு பிடிக்க - அரம்பை காளாஞ்சி ஏந்த - ஊர்வசி ஆலவட்டமசைக்க - அம்மை அன்ன மென நடந்து ஐயன் மருங்கணைந்தாள்.

செம்பொன் அரதனப் பீடத்தில் புனிதனோடு பிராட்டி யிருந்த காட்சி கற்பகமருங்கில் பூத்த காமருவல்லி போன் றிருந்தது.

பண்ணுமின் னிசையு நீருந் தண்மையும் பாலும் பாலில்
நண்ணுமின் சுவையும் பூவு நாற்றமு மணியு மங்கேழ்
வண்ணமும் வேறுவேறு வடிவுகொண் டிருந்தா லொத்தது
அண்ணலு முலக மீன்ற அம்மையு மிருந்த தம்மா.

ஆழி அங்கை அண்ணல் பொற்கரக நீர்வார்க்க: பிரமன் தீ வளர்க்க; புங்கவர் முனிவர் கற்பின் மகளிர் - போதிலே பொருந்திய மங்கையர் இருவரோடு மங்கலம் பாட, அம்பிகை யின் கமுகு ஒத்த கழுத்திலே பெருமான் மங்கலநாண் பூட்டினார். இணரெரித் தேவாகவும், எரிவளர்ப்பவனாகவும், உணவுகொள் பவனாகவும் இருக்கின்ற பரம்பொருள் புருடனும் பெண்ணுமாகி மணவினை முடித்தான் என்றால் அப்புணர்ப்பினை யார் மதிக்க வல்லார் என்று வியக்கிறார் முனிவர் பரஞ்சோதி.

தேவியின் திருவடிகளை அம்மியில் வைத்து வசிட்டன் தேவியை அருகழைக்கவே - அவளும் வந்து ஆசி பெற்றாள்.

சடைமுடியை வயிரமணிமுடி அலங்கரிக்க மாமதுரைப் பதி யுறை சோமசுந்தரக் கடவுள் வழுதி மருமகனாகி அரசுவீற்றிருந் தார். மனிதருக்கு அரசனாகி, தெவ்வர்க்கு வென்றி மடங்கலாய்- மடநல்லார்க்கு இனித்த வடிவுடைக் காளையாய் - நிலமகட்குத் திருமாலாய் அநித்ய - நித்யங்களை அறிந்தோர்க்கு உறுதிப் பொருளாய் நிற்கின்ற பரம்பொருள் தடாதகைப் பிராட்டி யாரை மணங் கொண்ட வைபவத்தை மாமதுரை கண்டு சிறந்து களிகூர்ந்தது.

(வளரும்)

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை

செஞ்சொற்கொண்டல், வித்துவான்
திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.

(மலர் 27, இதழ் 10, பக்கம் 479 இன் தொடர்ச்சி)

சத்தியத்தைக் கடைப்பிடிப்போர் இளைஞர் நெஞ்சில்
சன்மார்க்க நெறிநின்று நிலைக்க வேண்டும்;
பத்திநெறி மக்கள்மனப் பாங்கை யொட்டிப்
பாட்டாளி மக்கள் உளப் பசுமை ஓங்க
நித்தியமும் திருப்பணிகள் புரிதல் வேண்டும்;
நெஞ்சாலும் தன்னலத்தை நினைந்தி டாதோர்
கொத்திவரும் கீழ்மையினைப் போக்கி நாட்டில்
குடியேற்ற வேண்டுநல் அருள் அறத்தை! 18

பதவிவெறி யில்லாத பண்பார் மாந்தர்,
பண்புநலம் பெருகுதற்காப் பணிகள் செய்ய
உதவிசெய்து பேணிவந்தால் மீண்டும் நாட்டில்
ஒப்பற்ற அருள் தழைக்க வழியும் உண்டு!
மதவிருப்பம் கொண்டறவோர் அன்ப றத்தை
மலர்த்திடற்கு நாடுவரேல் மீளல் உண்டு!
'கதவிடித்தால் கொடுத்திடுவான் கடவுள்' என்ற
கர்த்தருரை கருதுதற்கு நெஞ்சே வேண்டும்! 19

அவ்வுலகம் கிடக்கட்டும்; அருள் தழைத்தால்
அவனியிலே பேரின்பம் பெருகும்; இங்கே
இவ்வுலகம் நன்றாகும்; அமைதி ஓங்கும்;
இன்னாத செயல்நீங்கி இனிமை செய்யும்;
செவ்விநெறி நலர் தழையும்; ஆத லாலே
சிறப்புடையீர்! அருள் என்ற உயிர்த்துடிப்பை,
எவ்விதத்தும் பரப்பிடுவீர்; வைய கத்தில்
எந்தமிழர் நன்னாட்டை உயர்த்தல் செய்வீர்! 20

இலக்கியத்தை நோக்கிடுவீர் ; ஆடி நின்ற
எழில்மயிற்குப் போர்வைதந்தோன் எமது வீரன் !
துலங்குமலர் முல்லைக்குத் தேரை யீந்த
தொல்வளமை படைத்தவன்எம் அருளார் பாட்டன் !
கலங்கிவரும் கலைஞர்க்குப் புலவர் கட்குக்
காரெனவே கொடுத்தளித்தோர் எமது கூட்டம் !
இலங்கும் அருள் பழந்தமிழர் உயிர்ப்பண் பாகும் ;
எடுத்துரைக்கும் சான்றுபல ; விளக்கம் வேண்டா ! 21

பஞ்சமெனில் படிக்காசு கொண்டு நாட்டைப்
பரிந்தணைத்த அருளெங்கே? நாட்டில் எங்கும்
விஞ்சுகுளிர் சுரமென்னில் தமிழைப் பாடி
வியந்திடவே யதைத்துரத்தும் கருணை எங்கே ?
'அஞ்சுகிலோம் ; அரனடியோம் ; அரச னேனும்
ஆணையெமை என்செய்யும்' என்றுரைத்தே
நெஞ்சுகனிந் தருவுரைகள் தந்த வாய்மை
நிலைமாறிப் போயிற்றே ? எங்கே ? எங்கே ? 22

கோபுரத்தைக் கண்டிருப்போம் ; கோயிற் குள்ளே
குடியிருந்த தெய்வத்தின் அருளின் ஆற்றல்
ஆபரணம் பறிகொடுத்தோம் ; மீண்டும் அந்த
அணிபறித்துச் சூடுவமோ ? கருணை சார்ந்தே,
தீபமெனும் விளக்கேற்றி இருளைச் சாய்ப்போம் ;
தினவெடுக்கும் பொல்லாங்கைத் துரத்தி விட்டுத்
தூபமிட்டுப் புகைகாட்டி அருளை ஏத்தித்
தொழுதிருப்போம் ; புத்துலகு சமைப்போம் நன்றே. 23

பெண்ணினத்தைத் தாய்மையருள் பேண வைத்துப்
பேசுகின்ற வீரர்களைச் செயலிற் கூட்டி
மண்ணகத்தில் ஏழைமையை விரட்டி எங்கும்
மன்னுகின்ற சமதரும ஒளியைப் பாய்ச்சி,
பண்ணகத்துக் கோத்ததமிழ்ப் பாடல் போலே
பகருகின்ற பெருநிலையை வள்ளுவத்தை
எண்ணகத்தே பெருக்கியபின் நிமிர்ந்து நிற்போம் !
ஈதன்றோ அருளுலகம் ! என்றே ஆர்ப்போம் ! 24

பலவழிகள் அருளுலகம் காண்டல் உண்டு ;
பகருமஒன்றே புலால்மறுத்தல் ; ஆதலாலே
'சிலபேர்கள் தமதுடலைப் பெருக்குதற்குச்
செகுத்திடுவ தேன்மற்ற உயிரின் கூட்டை ?
நலஞ்சாரும் அருளையவர் ஆள்வ தெங்ஙன் ?
நவில்க'என வள்ளுவனார் நயந்த சொல்லைப்
பலமுறையுங் கற்றிடுவோம்; புலால் மறுப்போம் ;
பாரிலிது சிறப்புடைய பணியும் ஆகும் ! 25

'கொஞ்சுதமிழ் இலக்கணத்தைப் புதைத்து விட்டுக்
கூவுகின்றார் ஒப்பாரிக் குரலெ டுத்தே
அஞ்சுகின்றேன்' என்றுரைத்துப் புதிய பாட்டின்
அவலநிலை முடியரசன் ஓது கின்றார் ;
செஞ்சொலினால் நற்கவிதை தேனாய்ப் பாயும்
செந்நெறியாம் இலக்கணத்திற் கியைந்த வாறே
விஞ்சுபொருட் சிறப்புடனே பாடு கின்ற
வீரமுடைக் கவியரங்கம் இதுவாம் என்பேன். 26

வாடியநற் பயிரதனைக் கண்ட போதே
வாடிநின்றேன் என்றுரைத்தார் வடலூர் வாணர் ;
'ஓடுமிவ் வுலகிதனில் அருளை யற்றார்
ஒன்றாலும் சிறத்தலிலை ; செல்வத் துள்ளே
நாடிடுசீர்ப் பெருஞ்செல்வம் அருளே ; வாழ்வில்
நல்லருளை யில்லார்க்குப் புத்த றங்கள்
கூடிடலு மில்லை' யெனக் குறளில் பத்துக்
குறளாலே குரல்கொடுத்தார் அறிவுத் தந்தை. 27

உலகமுற்றும் ஒருகுடும்ப மாக எண்ணும்
ஒப்பற்ற திருவுள்ளம் வளர வேண்டும் ;
கலகமற்ற திருநாட்டைக் காணு கின்ற
கண்வேண்டும் ; கருத்தினிலே தெளிவு வேண்டும் ;
இலகுகின்ற வியட்நாமில் மாந்தர் தம்மை
எரித்திடுவார் என்றாலும், மேற்குக் கோடி
உலவுமொரு நாட்டினிலே துயரென்றாலும்
உள்ளத்தால் நைந்துருகும் கனிவு வேண்டும். 28

புவியுற்ற மாந்தரெலாம் ஒருதாய் மக்கள் ;
புகழுற்ற கவிஞரெலாம் எமது தோழர் ;
செவியுற்ற பாட்டெல்லாம் நமக்குத் தேனும் ;
செந்தமிழோ ஆரியமோ அறிவுச்செல்வம்
குவிந்திருக்கும் ஆங்கிலமோ எதுவானாலும்
கூறிவரும் நல்லனவே நமக்குத் தேவை !
அவித்துவிடா மல்செவியைத் திறந்து வைப்போம் ;
அவ்வாறே நெஞ்சாலும் மெய்மை கொள்வோம் ! 29

தத்துவஞ்சேர் 'ரஸ்ஸலெ'னும் பேரைக் கொண்டோன்,
தாவில்லா 'பெர்னுட்ஷா', 'சாந்த யானு'
நத்துபுகழ் 'எமனே', சீர்ப் 'பர்ரோ' வென்னும்
நல்லறிவோர் மேற்றிசையில் ஒளிபரப்பி,
இத்தரையின் வாழ்வுக்காய் அருள றங்கள்
எடுத்துரைத்தே வருகின்றார் ; இவர்போல் வாரை
ஒத்திடும்நம் நாட்டினுக்கே உறவென் போமோ ?
உலகத்துக் கன்றேவிங் கவர்தம் மூச்சு ? 30

'உள்ளுவதில் அருமையுடைப் பொருளாம்' என்றே
ஓங்குகின்ற அருளுக்குப் பொருளிருக்கும் ;
தள்ளுகின்ற கீழ்மையினை இடித்துத் தள்ளித்
தழுவுகின்ற நல்லறத்தை அணைத்துப் போற்றி,
அள்ளுகின்ற நல்லமுதாய்த் தமிழின் பாட்டை
அயராதே வாய்மடுத்துத் தழைத்து நிற்போம் ;
கள்ளமிலாத் தமிழகத்தே அருளின்பாதை
கனிந்தெழிலின் சீர்மணக்க வாழ்வோம் நன்றே. 31

பொருள் வளர்ப்போர் வளர்க்கட்டும் ; ஆழ்ந் தகன்ற
புந்திநலம் படைத்திடுவோர் சேர வாரீர் !
அருள் வளர்க்க முந்திடுவீர் ; முயற்சி செய்தால்
அலைபோல வருமிடரைத் தகர்த்து நிற்பீர் !
தெருள்வளர்க்கும் கல்லூரி இளைய நண்பீர் !
திருநெறியைக் காட்டுகின்ற ஆசான் மாரே !
அருள்வளர்த்தல் ஆர்கடனே என்றிராதீர் !
ஐயன்மீர் ! நம்மனைவர் கடனும் ஈதே ! 32

சந்திரன்

வேதாந்த சிரோமணி,

பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்

(மலர் 27, இதழ் 10. பக்கம் 483 இன் தொடர்ச்சி)

கிரணங்கள் :

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் மோஹினி உருவத்தில் வந்த திருமால் அமிர்தத்தைப் பங்கிட்டுக் கொடுக்கும்பொழுது தேவர்களுடைய வரிசையில் அசுரன் ஒருவன் சந்திரன் சூர்யன் இவர்களுடைய நடுவில் உட்கார்ந்து அமிர்தத்தைப் பெற்றான். சந்திர சூரியர்கள் அதைத் திருமாலுக்கு உணர்த்தினர். கோபம்கொண்ட திருமால் அவ்வசுரனை இரண்டு துண்டாக்கினார். அமிர்தம் உண்டபடியால் இறக்காத அந்த அசுரன் தலைப்பக்கம் ராகு என்றும். உடல் பக்கம் கேது என்றும் இரண்டாக ஆனான். இவ்விதம் இரண்டாக ஆன அந்த அசுரன், தான் இரண்டாக ஆனதற்குச் சந்திர சூரியர்களே காரணம் என உணர்ந்து சந்திரனைப் பௌர்ணமியன்றும், சூரியனை அமாவாசையன்றும் விழுங்குகிறான். இதுவே கிரஹணம் என்று இந்தியர் கூறுகின்றனர். கணித சாஸ்திரத்திலும், சந்திர சூரியர் வானவெளியில் ஊர்ந்து செல்லும்போது பதிமூன்று பாகைக்குள் ராகுவோ அல்லது கேதுவோ இருக்க வேண்டும்; அப்பொழுதுதான் கிரஹணம் ஏற்படும் என்று கூறுமுகத்தால் ராகு கேதுக்கள், சந்திர சூரியனை விழுங்குகின்றனர் என்ற கொள்கையை ஆதரிப்பதுபோலவே தோன்றுகிறது.

விஞ்ஞானிகளோ, வேறுவகையாகக் கிரஹணத்தைப்பற்றிக் கூறுகின்றனர். பூமி சூரியனைச் சுற்றுகிறது. தன்னையும் சுற்றிக்கொள்ளுகிறது. சந்திரன் பூமியைச் சுற்றி வருகிறது. ஆகவே சந்திரனும். பூமியும் சூரியனைச் சுற்றி வருகின்றன. அமாவாசை நாட்களில் சூரியன் பூமி சந்திரன் இம்மூன்றும் ஒரே நேர்கோட்டில் இல்லாமல் சந்திரன் சற்று கீழோ அல்லது மேலோ விலகியிருக்கும். இந்த அமாவாசைகளில் சூரியகிரகணம்

ஏற்படுவது இல்லை. சில அமாவாசைகளில் இம்மூன்றும் ஒரே நேர்கோட்டில் வரும். அப்பொழுது சந்திரன் சூரியனை மறைக்கும். இம்மறைவே சூரிய கிரஹணம். இதேமாதிரி சில பௌர்ணமிகளில் அவை ஒரே நேர்கோட்டில்வரும். அப்பொழுது சூரியனிடமிருந்து சந்திரன்மீது விழும் ஒளியைப் பூமி தடுத்து விடுகிறது. சந்திரன் நமக்குத்தெரியாமல்போகும். இத்தகைய மறைவே சந்திரக்கிரகணம். ஒரு ஆண்டில் ஏழு கிரகணங்கள் வரையில் உண்டாகலாம். அப்படி ஏற்படும்பொழுது சூரிய கிரஹணம் ஐந்தாகவும், சந்திர கிரஹணம் இரண்டாகவும் இருக்கும். அல்லது சூரிய கிரஹணம் நான்காகவும், சந்திர கிரஹணம் மூன்ருகவும் இருக்கும். சந்திரக் கிரஹணம் எந்த ஆண்டிலும் மூன்றுக்குமேல் உண்டாவதில்லை. முழு சந்திரக் கிரஹணம் $1\frac{3}{4}$ மணி நேரம் நீடிக்கிறது. சூரிய கிரஹணத்தில் சூரியனுடைய முழுமறைவு $7\frac{1}{2}$ நிமிஷ நேரமே நீடிக்கும்.

மற்ற நாடுகளில் கிரஹணத்தின்போது நச்சுவாயு தண்ணீரில் கலந்துவிடும் என அஞ்சி ஐரோப்பியர் கிணறுகளை மூடி வைத்தனர். பெருநாட்டு மக்கள் கொடிய பிசாசுகள் விழுங்குவதாகக் கருதி, நாய்களை அடித்து ஊளையிடச் செய்து அப்பிசாசுகளைப் பயமுறுத்தினர். ரோமானியர் கூச்சலிட்டும், சாமான்களை அடித்து சப்த முண்டாக்கியும் தீவட்டிகளைக் கொளுத்தியும் அப்பேய்களை விரட்டினர். இப்படிப் பலவகையான நம்பிக்கைகளும், அதைத்தீர்க்கப் பல உபாயங்களும் கைக்கொள்ளப்பட்டன.

சந்திர காந்தக்கல் சூரியகாந்தக்கல் என்ற பலவகைக் கற்கள் உண்டு. அவற்றில் சந்திரகாந்தக்கல்லில் சந்திரனின் ஒளிபடுமாளுல் அதனின்று நீர் துளிர்க்கும். சூரியக்காந்தக் கல்லில் சூரிய ஒளி படுமாளுல் நெருப்பைக் கக்கும் என்றும் இலக்கியங்களில் கூறப்படுகிறது.

தோத்திரம் :

ஸ்காந்த உபபுராணத்தில் உள்ளதாக ஒரு அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்திரம் நவக்கிரஹ ஆராதனக்கிரமம் என்ற நூலில் அச்சிடப்பட்டுள்ளது. ஆனால் சென்னை அர்ச்சக சங்கத்தில் அச்சிடப்பட்டுள்ள அஷ்டோத்தர கதம்பத்தில் நாமாவளி மட்டும் வேறு ஒருவகையாகக் காணப்படுகிறது. பிர்மவைவர்த்த புராணத்தில் உத்தரகாண்டத்தில் கவசஸ்தோத்திரம் ஒன்றும்

பிர்மாண்டபுராணத்தில் ஒன்பதாம் அம்சத்தில் உமாமகேச்வர சம்வாத ரூபமாக உள்ள இடத்திலுள்ள ஒரு சந்திர ஸ்தோத்திரமும் அச்சிடப்பட்டுள்ளன. சந்திரனுக்காக அச்சிடப்பட்டிருக்கும் காயத்ரீ மந்திரங்களேயும், அவற்றின் பொருளேயும், விருத்த லக்ஷணங்களேயும் கவனித்தால் கொஞ்சம் குழப்பம் ஏற்படுகிறது.

1. ரோஹிணீசாய வித்மஹே பத்மஹஸ்தாய தீமஹி
   தந்ந: ஸோம: ப்ரசோதயாத் ll

2. சீதபரபாய வித்மஹே ஷோடசகலாய தீமஹி
   தந்ந: ஸோம; ப்ரசோதயாத் ll

3. காச்யபாய வித்மஹே கமல ஹஸ்தாய தீமஹி
   தந்நச்சந்த்ர: ப்ரசோதயாத் ll

இப்படிப் பல காயத்ரி மந்திரங்கள் இருக்கின்றன. ஆனல் சந்திரனுடைய உருவ அமைப்பையும், தியானங்களேயும் கூறுமிடங்களில் கையில் தாமரையுள்ளதாகச் சொல்லப்படவில்லே. முற்கூறியசிலவற்றில் விருத்தத்திற்குப்பங்கமும்காணப்படுகிறது. சாந்திரத்னகரத்தில் இந்த இந்த திதி, வார, நக்ஷத்திரங்களில் ஜ்வரம், வியாதி முதலியன உண்டானல் இந்த இந்த விதமான சாந்தி செய்யவேண்டும் என்று சொல்லப்படுகிறது; அங்கு,

இந்துவாரே பவேத்வ்யாதி; ஸோமஸ் தத்ராதி தேவதா
க்ருதான்னேன பலிம் தத்யாத் ஸப்த ராத்ரேண முஞ்சதி ll

திங்கட்கிழமை நோய் உண்டானல் சந்திரன் அதற்கு தேவதை. நெய்கலந்த அன்னத்தால் பலியிடவேண்டும். ஏழு நாட்களில் வியாதி தீரும் என்று சொல்லப்படுகிறது. மேலும்,

சந்த்ரஸ்ய து ஸஹஸ்ராணாம் தர்சனத் புவி மானவ:
ப்ர பௌத்ர தர்சனத் வாபி ஸர்வ பாபை; ப்ரமுச்யதே ll

ஆயிரம் சந்திரப்பிறைகளேக் காண்பதாலோ, பேரனுடைய பிள்ளேயைப் பார்ப்பதாலோ மனிதன் சகல பாபங்களினின்றும் விடுபடுகிறன்.

சதாபிஷேகம் என்ற ஒரு சாந்தியும் கூறப்படுகிறது, சௌரமான ரீதியால் பிறந்து அறுபது ஆண்டுகள் கழித்தவன்

அறுபத்தொன்றும் ஆண்டின் தொடக்கத்தில் ஷஷ்டியப்த பூர்த்தி என்ற சாந்தியைச் செய்துகொள்ளுகிருன். அதேபோல் பிறந்து ஆயிரம் பிறைகளைக்கண்டவன் "சதாபிஷேகம்" என்ற சாந்தியைச் செய்துகொள்ள வேண்டும் என்று கூறி அதற்கு வேண்டிய முறைகளும் கூறப்படுகின்றன.

"ரேவாது நர்மதா ஸோமோத்பவா மேகல கன்யகா" என்பது நாமலிங்கானு சாசனம் என்ற நிகண்டு. சூரியனுடைய பெண் யமுனை, தப்தி என்ற நதிகள் என்பதுபோல சந்திர னுடைய பெண் நர்மதா என்று சொல்லவே தோன்றுகிறது. ஆனால் நிகண்டுவின் உரையாசிரியர்கள் கூறுவது :-

1. நர்மதா நதி தன்னிடம் மூழ்கியவர்களுக்கு, சுவர்க்கத் தைக் கொடுக்கிறது. சோம; அமிர்தம். இதனின்றும் உண்டா கிறது. ஆதலின் சோமோத்பவா.

2. சோம வம்சத்து அரசனை புரூரவசுவினுல் கொண்டு வரப்பட்டபடியால் சோமோத்பவா.

3. சோம என்பது ஒருமலை, அதனின்றும் உண்டானபடி யால் சோமோத்பவா.

4. சோமலதை இதன் கரையில் மிகுந்து இருப்பதால் சோமோத்பவா.

5. சோம, ருத்ரன் அவனிடமிருந்து உண்டானபடியால் சோமோத்பவா. இப்படிப் பலவகையான பொருள்களைக் கூறிய போதிலும் இவற்றிற்குப் பிரமாணம் காட்டாமல் சந்தேகத் துடனேயே முடிக்கின்றனர்.

சம்சயம், நிச்சயம், கர்வம், ஸ்மரணம் என்ற விருத்தி போதத் தால் அந்தக்கரணம் ஒன்றேயாயினும் மனஸ். புத்தி. அகங் காரம், சித்தம் என்று நான்கு வகையாகக் கூறப்படும். சம்சய ரூபமான விருத்தியுடையது மனஸ். அதற்கு அதிதேவதை சந்திரன். ஆதலின் அந்த சந்திரனைப்பற்றிய கட்டுரையும் சம்சயத்திலேயே முடிவடைகிறது.

இராஜராஜ சோழன்

முன்னுரை :

தமிழகம் சேர சோழ பாண்டிய மண்டலங்கள் என மூன்று கூருகப் பிரிக்கப்பட்டிருந்தது. 'சேர சோழ பாண்டிய மன்னர்களைப் படைப்புக்காலம்தொட்டு மேம்பட்டுவரும் குடிகள்' எனப் போற்றுகிறுர் பரிமேலழகர். இவர்களில் சோழர் சூரிய குலத்தினர். செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் எனச் சோழர் குடியைப் புகழ்கிறது மணிமேகலை. இம் மன்னர்கள் உறையூர், புகார், தஞ்சை, கங்கைகொண்டசோழபுரம், பழையாறை ஆகிய ஊர்களைத் தலைநகரங்களாகக்கொண்டு அரசாண்டனர்.

சோழமன்னர், தில்லைச்சிற்றம்பலவனைத் தங்கள் குலதெய்வமாகக்கொண்டு போற்றியவர்கள். சோழர்களில் எவரும் சைவநெறியை விடுத்துப் புறச் சமயம் சார்ந்தொழுகியதாக வரலாற்றில் இல்லை. இதனை எண்ணுமிடத்து, சிவபெருமானிடம் சோழ மன்னர்கள் கொண்டிருந்த சிறந்த பக்தியுணர்வு நன்கு புலப்படுகிறது. இதனுல்தான்,

" மைவைத்த நெறியன்றி மற்றேர் நெறிகருதாத்
தெய்வக் குடிச் சோழர் "

எனச் சோழ மன்னர்களைத் திருத்தொண்டர் திருவந்தாதி போற்றுகிறது.

சோழர்கள் செய்துள்ள சமயப் பணிகள் உலகம் வியக்கக் கூடியவை. காவிரியின் இருமருங்கும் எண்ணற்ற சிவாலயங்களை எழுப்பி, சிவநெறி விளங்கச் செய்தவர்கள் இவர்கள். சோழர்களின் முன்னேர்களில்முசுகுந்தன் இந்திரனிடம் பெற்ற தியாகேசரை நிலவுலகில் திருவாரூரில் எழுந்தருளச் செய்தான். கோச்செங்கட் சோழன் திருவானைக்காவில் சிலந்தியாக இருந்து இறைவனை வழிபட்டுச் சோழனுகப்பிறந்து யானை ஏருத எழுபது மாடக் கோயில்கள் இயற்றினுன். அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒருவராய்ப் புகழ்ச்சோழர் போற்றப்படுகிறுர். இன்னும் மங்கையர்க்கரசியாரைப் பெற்றெடுத்துப் பாண்டிவளநாட்டில் சைவநெறி விளங்கக் காரணமாயிருந்தவன் மணிமுடிச்சோழன்.

பழையாறையில் அப்பரடிகளின் இடர் போக்கியவன் ஒரு சோழ மன்னன். சுந்தரர் சேரமானேடு மதுரை சென்ற காலத்தில் சோழ மன்னன் ஒருவனும் அவரைப் போற்றியதாக அறிகிறோம்.

இவ்வாறு சோழர்களின் முன்னேர்கள் செய்துள்ள சமயப் பணிகளைத் தொடர்ந்து பிற்காலச் சோழர்கள் செய்துள்ள சமயப் பணிகளைக் காண்போம்.

பிற்காலச்சோழர் :

பல்லவர் அரசு வலிகுன்றிய காலத்தில் சோழப்பேரரசை இடைக்காலத்தல் நிறுவியவன் விசயாலய சோழமன்னன் ஆவான். தஞ்சையைத் தலைநகராகக்கொண்டு கி. பி. 846 முதல் 881 வரை அரசாண்டவன் இவன். சோழமன்னர்கள் மாறிமாறிப் புனைந்துகொண்ட பட்டங்களில் பரகேசரி என்ற பட்டமுடைய வன். புதுக்கோட்டை நாட்டில் நார்த்தாமலையில் விசயாலய சோழேச்சுரம் என்ற கோயிலை நிறுவியவன் இவன். தஞ்சை யில் நிசும்பசூதனி கோயில் அமைத்தவன். இவன் மகன் ஆதித்தசோழன் கி. பி. 871 - 907. இராஜகேசரி என்ற பட்ட முடையவன். இவன் பல்லவமன்னன் அபராஜிதனை வென்று தொண்டைமண்டலத்தைக் கைப்பற்றியவன். இவ்வேந்தன் காவிரியின் இரு கரைகளிலும் பல சிவாலயங்களைக் கற்றளிகளாக எடுப்பித்தான். இவன் எடுத்த கோயில்களில் குறிப்பிடத் தக்கது திருப்புறம்பயத் திருக்கோயில். இதற்கு ஆதித்தேச் சுரம் என்று பெயர். தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்தவன் இவன். திருஎறும்பியூர்க் கோயிலைக் கற்றளியாக் கினன். ஆதித்தசோழனுக்குப் பின் அரியணையேறியவன். அவன் மைந்தன் பராந்தகன் கி. பி. 907 - 953 இவனது ஆட்சிக் காலத்தில் சோழமண்டலம், கொங்குமண்டலம், தொண்டை மண்டலம் மூன்றும் இணைந்திருநதது. தில்லைச் சிற்றம்பலத் திற்குப் பொன் வேய்ந்த மன்னன் இவன்.

"கோதிலாத் தேறல் குனிக்கும் திருமன்றம்
காதலாற் பொன்வேய்ந்த காவலன்"

என்று இவனை ஒட்டக்கூத்தர் புகழ்ந்து கூறுவர். இவ்வேந்தன் ஆட்சிக்காலத்தில் திருவிடைமருதூர், திருவாவடுதுறை, திருச் செந்துறை, உறுமூர் ஆகிய ஊர்களில் உள்ள கோயில்கள் கற்றளிகளாக எடுக்கப்பெற்றன. திருச்செந்துறைக் கோயில் இவன் மருமகளால் எடுப்பிக்கப்பெற்றது. இவனது ஆட்சித்

திறனை வெளியிடும் கல்வெட்டுக்களில் கிராமசபை அமைப்புமுறை யைக் குடவோலை முறை வழித்தேர்ந்து நடத்தும் செய்தியை உத்தரமேரூர்க் கல்வெட்டு உணர்த்துகிறது. முதற்பராந்தக னுக்குப் பின் இவன் இரண்டாம் புதல்வர் கண்டராதித்தர் கி. பி. 950 முதல் 957 வரை அரசாண்டனர். இவ்வேந்தர் மிகுந்த சிவபக்தியும் செந்தமிழ்ப் புலமையும் ஒருங்கே உடையவர். தில்லை நடராசப் பெருமான்மீது இவர் பாடிய திருவிசைப்பாத் திருப்பதிகம் ஒன்று ஒன்பதாந் திருமுறையில் விளங்குகிறது. இம் மன்னர் புறச்சமயங்களையும் போற்றும் இயல்பினர். சிவஞானியாக விளங்கிய இம் மன்னரைச் சிவஞானகண்ட ராதித்தர் எனக் குறிப்பிடுவர். கண்டராதித்தர் தம்பியாகிய அரிஞ்சய சோழன் (கி. பி. 956 - 57) பதவி ஏற்றான். இம் மன்னன் வடஆர்க்காடு மாவட்டம் ஆற்றூரில் இறந்ததால் இவனை ஆற்றூர்த்துஞ்சின தேவர் என்பர். இம் மன்னனது நினைவாகப் பிற்காலத்து இவன் பேரனாகிய இராஜராஜசோழன் அரிஞ்ச யேச்சுரம் என்ற திருக்கோயிலை எடுப்பித்தான்.

இம் மன்னனுக்குப் பின் இவன் மகன் இரண்டாம் பராந்த கன் கி. பி. (957 - 970) அரசுரிமை ஏற்றான். இம் மன்னன் பெரு வீரன். இம் மன்னனது மகனே இராஜராஜசோழன் ஆவான். சுந்தரசோழனுக்கு வானவன் மாதேவி என்ற மனைவி இருந்தனள். கணவன் இறந்ததும் தானும் உடன்கட்டை ஏறிய தையல் நல்லாள் இவள்.

முதல் இராஜராஜசோழன் தானெடுத்த தஞ்சைப் பெரிய கோவிலில் தந்தை சுந்தரசோழன் படிமத்தையும், தாய்வானவன் மாதேவி படிமத்தையும் எழுந்தருளுவித்தனன். தன் தந்தை யின் பெயரால் சுந்தரசோழ விண்ணகர ஆதுரசாலை என்ற மருத்துவ நிலையம் ஒன்றையும் நிறுவினன். சுந்தர சோழனுக் குப் பின் கண்டராதித்த சோழனுடைய புதல்வனும் தன் சிறிய தந்தையுமாகிய உத்தம சோழனை (910 - 985) இராஜராஜன் அரசனாக்கி மகிழ்ந்தனன். இவனது ஆட்சிக் காலத்தில் இவன் அன்னையாகிய செம்பியன்மாதேவி சிறந்த பல கோயில்களை எழுப்பி உள்ளாள். தஞ்சை மாவட்டம் கோனேரிராஜபுரம் என்ற ஊரிலுள்ள திருநல்லம் என்னும் தலத்தில் உள்ள கோயிலைக் கற்றளியாக எடுப்பித்து, தன் கணவன் பெயரையே இக் கோயிலுக்குச் சூட்டினள். இவ்வம்மையார் விருத்தாசலம், திருக்கோடிகா, தென்குரங்காடுதுறை, செம்பியன்மாதேவி, திருவாரூர், திருத்துருத்தி, ஆனாங்கூர், திருமணஞ்சேரி, திரு வக்கரை முதலிய தலங்களில் திருக்கோயில்கள் எடுப்பித்தனள்.

இராஜராஜ சோழன் :

சோழவள நாட்டின் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் காரண மாக விளங்கியவன் இம் மன்னனுவன். இவ் வேந்தன் இரண் டாம் பராந்தக சோழனுக்கு அவன் பட்டத்தரசியாகியவானவன் மாதேவிபால் பிறந்த அருந்தவப் புதல்வனுவன். இவன் எடுப் பித்த தஞ்சை இராஜராஜேச்சுரத்திலும், இவன் மனைவி திருவை யாற்றில் கட்டுவித்த உலோகமாதேவீச்சுரத்திலும் திங்கள் தோறும் சதய நாளில் சிறப்பு விழா எடுக்க நிவந்தங்கள் விட்டிருப்பதால் இவன் சதய நாளில் பிறந்தவன் என்பது அறியப்படுகிறது.

"சதய நாள் விழா உதியர் மண்டலம் தன்னில் வைத்தவன்" என்று கலிங்கத்துப்பரணி கூறுகிறது. இவ்வேந்தன் மலையாள நாட்டில் முட்டம் என்னும் ஊருக்கு மும்முடிச் சோழ நல்லூர் என்று பெயரிட்டு அதனைத் திருநந்திக்கரை என்னும் ஊரிலுள்ள கோயிலுக்கு இறையிலியாக அளித்துத் தான் பிறந்த ஐப்பசிச் சதய நாளில் விழா நடத்துமாறு ஏற்பாடு செய்துள்ளமையால் இவன் ஐப்பசிச் சதய நாளில் பிறந்தவன் என்பது அறியப் படுகிறது. இவன் ஆட்சிக் காலத்தில் திருவெண்காட்டிறை வர்க்கு ஏழுநாள் ஐப்பசிச் சதய விழா எடுத்திருப்பதை நோக்க இவன் பிறந்த நாள் ஐப்பசிச் சதயம் என்பது உறுதிப்படுகிறது.

இம்மன்னன் பிறந்தபோது நாகர் மகளிர் தம் கணவர்க்கு நிலப்பொறை குறையும் என்ற மகிழ்ச்சியால் நடித்தனர் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன. இவன் கைகளில் சங்குசக்கரக் குறிகள் அமைந்திருந்தன என்றும் அச் செப்பேடு கள் புகழ்கின்றன.

இராஜராஜனது இளமைப்பெயர் அருண்மொழி வர்மன் என்பது. இவனது ஆட்சியின் மூன்ருமாண்டு முதல் இவனுக்கு இராஜராஜ சோழன் என்னும் பெயர் வழங்கத் தலைப்பட்டது.

இவனை இளமையில் வளர்த்தவர்கள் கண்டராதித்த சோழன் மனைவியாகிய செம்பியன் மாதேவியும், இவனது தமக்கையாகிய குந்தவைப்பிராட்டியாரும் ஆவர். சிவபக்தியையும் சமயப்பொறை முதலான உயர் பண்புகளையும் உடைய இவர்கள் ஆதரவில் வளர்ந்த காரணத்தால் அப்பண்புகளை உடைய வனுய் இம்மன்னன் விளங்கினுன்.

தம்மாட்சியில் நிகழ்ந்த வரலாற்றுச் செய்திகளை இனிய பாடலால் எடுத்துக்கூறும் மெய்க்கீர்த்தியைக் கல்வெட்டுக்களின் தொடக்கத்தில் எழுதும் பழக்கம் இவன் காலத்தில் ஏற்பட்டது. மெய்க்கீர்த்திகளின் தொடக்கத்தைக் கொண்டே இக்கல்வெட்டு எந்த மன்னனது, ஆட்சிக்காலத்தில் தோன்றியது என்பதை ஐயமின்றிக் கூறலாம். இராஜராஜ சோழனது மெய்க்கீர்த்தி "திருமகள் போலப் பெரு நிலச் செல்வியும்" என்று தொடங்கு வதாகும். இராஜராஜ சோழனுடைய ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை இது உணர்த்துகிறது. இம் மெய்க் கீர்த்தித் துணைகொண்டு இராஜராஜ சோழனின் போர்ச் செய்தி களை அறிவோம்.

போர்ச்செயல்கள் :

திருவனந்தபுரத்திற்கு அருகில் காந்தளூர்ச்சாலை என்ற கடற்றுறைப்பட்டினம் ஒன்று இருந்தது. சேரர் குடியில்வந்த பாஸ்கரரவிவர்மன் என்பான் சோழனை எதிர்க்க இவ்வூரில் பெரிய கப்பற்படை வைத்திருந்தனன். இதனை இராஜராஜன் படையெடுத்துச்சென்று அழித்தனன். இதனால் இவன் காந்த ளூர்ச்சாலை கல மறுத்தவன் என்று தன்னைக் கூறிக்கொண்டனன்.

இப்படையெடுப்பில் சேரமன்னனைப் புறங்கண்ட இராஜ ராஜன் சேர நாட்டில் தன் சதய நாள் விழாவைக் கொண்டா டினன். இராஜராஜசோழன் திறைப் பொருள்கள் பலவற்றோடு கடவுட் படிவங்களையும் கைப்பற்றி வந்தனன், அவ்வாறு கொண்டுவந்த படிவங்களில் மரகததேவர்படிவம் திருப்பழனம் கோயிலில் எழுந்தருளுவிக்கப்பெற்றது.

பாண்டியன் அமரபுயங்கன் என்பானை இராஜராஜன் எதிர்த்துப் போர்புரிந்து வென்றனன். இவ்வாறு பாண்டியனை வென்றகாரணத்தால் செழியரைத்தேசுகொள் கோ இராஜகேசரி வர்மன் என்ற சிறப்புப் பெயரும், பாண்டிய குலாசனி என்ற பெயரும் இவனுக்கு ஏற்பட்டது.

இப்படையெடுப்பில் குடகுமலை நாட்டில் கொங்காள்வார் மரபில் வந்த ஒருவன் இராஜராஜனை எதிர்த்தனன். இப் போரில் திறமையோடு போரிட்ட பகைப்படையைச் சேர்ந்த மனிஜா என்பவனை இராஜராஜன் பாராட்டி அவனுக்கே அந் நாட்டை வழங்கினன்.

வேங்கைநாடும், கங்கபாடியும், நுளம்பபாடியும் தடிகை பாடியும், குடமலை நாடும், கொல்லமும், கலிங்கமும் முரட்டொழில் சிங்களர் ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரமும் தன் வன்மையால் வென்று கொண்ட வரலாறு மெய்க்கீர்த்தியால் அறியப்படுகிறது.

இராஜராஜன் நிகழ்த்திய போர்ச் செயலுக்குத் தலைமை வகித்து நடத்தியவன் இராஜராஜசோழன் புதல்வனாகிய இராஜேந்திர சோழனுவான், இராஜராஜ சோழன் வென்று கைக்கொண்ட நாடுகளில் ஈழமும் ஒன்று. அதனை ஆட்சி புரிந்தவன் ஐந்தாம் மகிந்தன் ஆவான்.

இராஜராஜ சோழனுடைய ஆட்சியின் பிற்பகுதியில் சோழப்பேரரசு உயர்நிலையில் இருந்தது. பாண்டிமண்டலம், சேரமண்டலம், தொண்டைமண்டலம், கங்கமண்டலம், கொங்கு மண்டலம், நுளம்பபாடிநாடு, கலிங்கநாடு, ஈழம் ஆகிய நாடுகள் இவனது ஆட்சிக்குட்பட்டன. இராஜராஜசோழன் பேராற்றலும், பெருவீரமும் கொண்ட இராஜேந்திரனுக்கு கி. பி, 1012-ல் இளவரசுப் பட்டம் கட்டினன்.

சிறப்புப் பெயர்கள் :

இராஜராஜ சோழனுக்கு மும்முடிச்சோழன், க்ஷத்திரிய சிகாமணி, இராஜேந்திர சிங்கன், இராஜாசிரயன், பாண்டிய குலாசனி, ஜெயங்கொண்டசோழன், சிங்களாந்தகன், சிவபாத சேகரன், கீர்த்தி பராக்கிரமன் முதலிய பல சிறப்புப் பெயர்கள் உள்ளன இராஜராஜன் என்ற சிறப்புப் பெயரே யாண்டும் பரவியதாகலின் அருண்மொழித்தேவன் என்ற இயற் பெயர் வழக்கற்றுப்போயிற்று.

குடும்பம் :

இராசராசனுக்கு (1) உலோகமாதேவியார், (2) சோழமாதேவியார், (3) அபிமானவல்லியார், (4) திரைலோக்கிய மாதேவியார், (5) பஞ்சவன்மாதேவியார், (6) பிருதிவீமாதேவியார், (7) இலாடமாதேவியார், (8) மீனவன்மாதேவியார் எனப்பல மனைவியர் இருந்தனர்.

இவனுக்கு இராசேந்திரன், என்ற மகனும், குந்தவை என்ற மகளும் இருந்தனர். மாதேவடிகள் என்ற பெயருடன் மற்றொரு மகளும் இருந்ததாகத் தெரிகின்றது.

மனைவியருள், தந்தி சத்தி விடங்கியார் என்னும் உலக மாதேவியாரே பட்டத்திற்குரியவராவர். இவ்வம்மையார் திருவையாற்றில் தன் பெயரால் உலோகமாதேவிச்சுரம் என்னும் கோயில் எடுப்பித்து அதன் வழிபாட்டிற்கும் நிவந்தம் அளித் துள்ளார். இவ்வம்மையார் இராஜராஜன் திருவிசலூர்க் கோயி லில் துலாபாரம் புக்கபோது உடனிருந்து இரணிய கருப்பம் புகுந்தாரென்பதைத் திருவிசலூர்க்கல்வெட்டு உணர்த்துகிறது.

இராஜராஜேச்சுரம் :

இராஜராஜன் தன்னுடைய சிவபக்திக்குக் கலங்கரை விளக்க மாகக் கண்டோர் வியக்கும் வண்ணம் எழுப்பிய திருக்கோயில் இராஜராஜேச்சுரம் ஆகும். புதிய அமைப்புடைய இக்கோயிலை முதன்முதலாகக் கட்டி முடித்தவன் இவன். இக்கோயில் 793 அடி நீளமும், 397 அடி அகலமும் உடையது. நடு விமானம் 216 அடி உயரமுடையது. இதன் உச்சியில் போடப்பெற்றுள்ள கல் 80 டன் எடையுள்ள ஓரே கல்லாகும். கலசம் 3383 பலம் எடை உள்ளது. அதன்மேல் வேயப்பட்ட பொற்றகடு 2926½ கழஞ்சு எடையுள்ளது. இக்கோயிற் பணி இவ்வேந்தனின் 19ம் ஆட்சி ஆண்டில் தொடங்கப்பெற்று 25ம் ஆண்டு நிறைவுற்றது.

இக்கோயிலின் முதற் கோபுரவாயில் கேரளாந்தகன்வாயில் எனவும், இரண்டாவது வாயில் இராஜராஜன் வாயில் எனவும் வழங்கப்பட்டன. இக்கோயில் விமானம் தட்சிணமேரு எனப் படும். கோயிலின் வெளிச்சுற்றிலுள்ள நந்தி ஓரேகல்லில் அமைந் தது. அது 12 அடி உயரமும், 19½ அடி நீளமும், 8½ அடி நீள மும் உடையது.

சுவாமி தஞ்சைப்பெருவுடையார் என வழங்கப்பட்டார். இப்பெருமான் மீது கருவூர்த்தேவர் பாடிய திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் அப்பர் சுவாமிகள், ''தஞ்சைத் தளிக்குளம்'' என்றொரு தலத்தைக் குறிப்பிடுகிறார். தஞ்சையில் தளிக்குளம் என்றொரு தலம் திருநாவுக்கரசர் காலத்தில் விளங்கியிருத்தல் வேண்டும். தஞ்சைத் தளிக்குளத்தையே இராஜராஜன் பெரிய கற்றளியாக எடுப்பித்து இராஜராஜேச்சுரம் என்று பெயரும் வழங்கினான் என்பது திரு. தி. வி. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் கருத்து. தளிக்குளம் என்ற தலம் இந்நகரிலுள்ள வேறோர் தலத்தைக் குறிப்பிடுகிறது என்பாரும் உளர்.

இராசராசன் புறச் சமயங்களையும் போற்றும் இயல்பினன். நாகையில் அமைந்த புத்த விகாரத்துக்குப் பொருளுதவி இராச ராசப் பெரும்பள்ளி என்று தன் பெயரைக் கோயிலுக்கு இடு மாறு செய்தனன். இவனது ஆட்சியில் இருந்த சிற்றரசர் சிலர் சமணர் கோயிலுக்குத் தானம் செய்துள்ளனர். இச்செய்தி களால் இவன் சமயப் பொறையுடையவன் என்பதை நாம் நன்குணரலாம்.

கோயிலமைப்பு :

தஞ்சைப் பெரியகோயில் சிறு கோட்டைபோல அகழி அரண்களோடு அமைந்து விளங்குகிறது. கிழக்கு நோக்கிய சந்நிதி. அகழைக் கடந்து கோபுர வாயில்களைக் கடந்து உள்ளே சென்றதும் 800 அடி நீளம் 400 அடி அகலமும் கொண்ட வெளிமுற்றம் உள்ளது. இம்மன்றத்திலமைந்த மேடைமீது நந்தியம்பெருமான் விளங்குகிருர். எதிரில் இறை வன் கோயில் விமானமும் அடுத்து அம்மையார் திருக்கோயி லும் உள்ளன. கோயில் அர்த்தமண்டபம் மகாமண்டபம் தபநமண்டபம், நர்த்தனமண்டபம், வாத்யமண்டபம், என்ற ஆறு பகுதிகளை உடையது. வாயில்களில் 18 அடி உயரமுள்ள துவாரபாலகர் உருவம் உள்ளன. விமானத்தில் கருப்ப இல்லின் வாயிலுக்குத் திருவணுக்கன் திருவாயில் என்று பெயர். விமா னத்தின் வடக்கிலும் தெற்கிலும் வாயில்கள் உள்ளன. தெற்கு வாயிலின் கீழ்ப்பகுதியில் திருமகள் கலைமகள் உருவங்கள் உள்ளன.

விமானம் சதுர வடிவமானது. 13 அடுக்குகள் கொண் டது. இவ்விமானம் தக்ஷிண மேரு எனப்படும். உத்தம விமானம் என்றும் கூறப்பெறும். பிரமரந்திரக்கல்லைத் தஞ்சைக்கு நான்கு மைலில் உள்ள சாரப்பள்ளம் என்ற கிராமத்திலிருந்து சாரம்போட்டு இவ்வியானச் சிகரத்தில் ஏற்றினுன் என்பர். இக்கல் சதுரவடிவினது. நான்கு மூலைகளில் நந்திகள் உள்ளன. இப்பிரமந்திரக்கல்லைபற்றிப் பல கதைகள் உள்ளன.

விமானவேலை நடக்கும்போது உணவளித்துதவிய ஓர் முதியவளின் வேண்டுகோளின்படி சிற்பிகள் தங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதற்கு அறிகுறியாக அவள் வீட்டிலிருந்த கல் ஒன்றை விமானத்தின் உச்சியிலமைத்தனர் என்றும், இறை வன் இராஜராஜனுடைய கனவில் கிழவியளித்த நிழலில் உவந் திருக்கின்ருேம் என்று கூற சோழன் உண்மையறிந்தனன் என்று பிரகதீஸ்வர மான்மியம் கூறுகிறது.

" அம்மையார் நிழலில்யாம் அமர்வோம்என் றருள்செய்த
செம்மையார் வீற்றிருக்கும் திருத்தஞ்சை."

— திருநாட்டுப் படலம் 51.

என இச்செய்தியை மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை மாயூரத் தல புராணத்தில் கூறியுள்ளார்.

" நதியுடைக் கோன்முன்னோர் நரைமுதியாள் நீழல்
வதிகின்ரேம் என்ன வந்தான் "

எனச் சிவக்கொழுந்து தேசிகர் தஞ்சைப் பெருவுடையார் உலாவிலும் கூறியுள்ளார். அக்கிழவியின் அன்புக்கு மகிழ்ந்த இராஜராஜன் அவளுக்கு நிலபுலங்கள் வழங்கினுன் என்பர்.

இக்கோயிலில் சமயச் சார்பான சிற்பங்களும் சித்திரங்களும் நிரம்ப உள்ளன. பிள்ளையார், திருமால், பிக்ஷாடனர், சூல தேவர், தக்ஷிணுமூர்த்தி, மார்க்கண்டேயர், நடராஜர், இலிங் கோற்பவர், அர்த்தநாரீசுவரர், கங்காதரர், கல்யாணசுந்தரர், மகிஷாசுரமர்த்தனி திருவுருவங்களும், நாககன்னிகையர், சமய குரவர், அஷ்டதிக்குப்பாலகர் திருவுருவங்களும் உள்ளன.

இக்கோயிலில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தபோது அஷ்ட பந்தன மருந்து இளகிப் பந்தனமாகாதுபோக போகர் கருவூர்த் தேவரை வரவழைத்து அஷ்டபந்தனத்தைச் சார்த்தினர் என்பர்.

பெருமான் திருப்பெயர் பெருவுடையார். அம்பிகை பெரிய நாயகி. வடமொழியில் பிருகதீஸ்வரர் — பிருகந்நாயகி என்பர். இறைவனைத் தக்ஷிணமேருவிடங்கர் எனவும் குறிக்கின்றனர்.

நிபந்தங்கள் :

இராஜராஜேச்சுரத்திற்கு இராஜராஜன் நாள்வழிபாட்டுக் கும், சிறப்பு வழிபாட்டுக்கும் ஏற்படுத்திய நிவந்தங்கள் பல. பலவகையான அணிகலன்களும் பாத்திரங்களும் கிராமங்களும் விளை நிலங்களும் இவன் காலத்து வழங்கப்பெற்றன.

ஸ்ரீ இராஜராஜேஸ்வரமுடையார் ஆடியருளும் திருமஞ்சன நீரில் போட சண்பகமொட்டு, ஏலவரிசி, இலாமிச்சைவேர் அளித்த செய்தி இவனது பக்தித் திறத்தை வெளிப்படுத்தும் கல்வெட்டாகும்.

வைரம், முத்து, மாணிக்கம் முதலிய மணிகளிழைத்த அணிகலன்கள் வழங்கப்பெற்றன. காளங்கள், திருப்பள்ளித்தொங்கல், தவளச்சத்திரம், திருக்கொற்றக்குடை, ஈச்சோப்பிகை, வெண்சாமரக்கை, காளாஞ்சி முதலியவைகளும் திருமுடி, வீரப்பட்டம், உதரபந்தனம், திருவடிக்காறை, திருப்பட்டிகை, சப்தசரி, பஞ்சசரி, திருக்குதம்பைத்தகடு, இராஜாவர்த்தம், திரள்மணிவடம் ஸ்ரீ சந்தம் முதலிய பொன்னுபரணங்களும், வருகவாளி, ஏகாவலி, முத்தின்கடகம், திருக்கால்வடம் முதலிய முத்தணிகளும், கண்டநாண்பாசமாலை வாகுவலயம், ரத்னமோதிரம் முதலிய நவரத்னுபரணங்களும் கொடுக்கப்பட்டன.

ஸ்ரீகார்யம் :

கோயில் பணிகளை மேற்பார்ப்போர் ஸ்ரீகாரியம் செய்வோர் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இராஜராஜன் காலத்தில் ஸ்ரீகார்யம் செய்தோன் தென்னவன் மூவேந்த வேளான் என்ற பெயரினன். இவன் சிறந்த சிவபக்தன். இவனே இத்திருக்கோயிலில் நம்பியாரூரர், நங்கைபரவையார், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சிறுத்தொண்டர், மெய்ப்பொருள் நாயனார் முதலிய நாயன்மார் திருவுருவங்களையும், இராஜராஜன் உலோகமாதேவி இவர்களுடைய திருவுருவங்களையும் எழுந்தருளுவித்து அணிகலன்கள் பலவும் அளித்துள்ளனன்.

திருமுறைப்பணி :

இறைவன் திருமுன் தேவாரத் திருப்பதிகங்களை ஓதுதற்கு இராஜராஜசோழனே நாற்பத்தெண்மரையும் கொட்டி மத்தளம், உடுக்கை வாசிக்க இருவரையும் நியமித்து இவர்கட்கு நாடோறும் முக்குறுணி நெல் நிவந்தம் அளித்த செய்தி கல்வெட்டில் காணப்படுகிறது. இவர்களேயன்றிக் கனபாடி ஆரியம் பாடுவாரும், தமிழிசை பாடுவாரும் இருந்தனர். ஆலயப்பணி செய்யவும் நடனமாடவும் பதியிலார் நானூறுபேர் இருந்தனர். ஆடல் பாடல்களில் தேர்ச்சிபெற்றோர் இவர். இவர்கட்குப் பக்கவாத்தியம் வாசிப்போர் பலர் இருந்தனர்.

பணியாளர் :

இக்கோயிலில் பண்டாரிகள் (பொக்கிஷதார்) கணக்கர் மெய்காப்பார், பரிசாரகர், திருவிளக்கிடுவார், மாலைகட்டுவார், வண்ணமிடுவார், சோதிடர், தச்சர், தட்டார், கன்னர், குயவர்

வண்ணார் முதலியோர் பணியாளராய் நியமிக்கப் பெற்றிருந் தனர்.

இராஜராஜன் திருவாரூர்த் தியாகேசரிடத்தில் மிக்க ஈடு பாடுடையவன் ஆதலின் தஞ்சையிலும் தியாகேசரை எழுந்தருளு வித்தனன். தியாகருக்குவிடங்கர் என்று பெயர். இத்தலத் திற்குரிய ஆகமம் - மகுடாகமம். தீர்த்தம் - சிவகங்கை தேரைத் தீர்த்தம் என்பன.

ஆறுமுகப் பெருமான்கோயில்

இராஜராஜேச்சுரத்தின் வடமேற்குத் திருச்சுற்றில் உள்ள ஆறுமுகப்பெருமான்கோயில் சிற்பவேலைகள் செறிந்தது. இக் கோயில் பிற்காலத்து நாயக்கர் ஆட்சியில் கட்டப்பெற்றது என்பர். அம்பிகை கோயிலும் நடராஜர் கோயிலும் பிள்ளையார் கோயில் முதலியனவும் பிற்காலத்தன என்பர். மேலைப் பிரா காரத்தில் கருவூர்ச்சித்தர் கோயில் உள்ளது.

நூல்கள் :

இத்தலத்திற்குப் பிரகதீசுவர மான்மியம், சமீவன க்ஷேத்திர மகாத்மியம் ஆகிய தல புராணங்களும், திருவிசைப்பாப் பதிக மொன்றும், திருப்புகழும், தஞ்சைப் பெருவுடையார் உலா என்ற பிரபந்த நூலும் உள்ளன,

இராஜராஜன் நாடகம்

இராஜராஜ சோழனின் மகன் இராஜேந்திர சோழனின் ஆட்சிக் காலத்தில் இக்கோயிலில் இராஜராஜேச்சுர நாடகம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தான். நாடகம் ஆடுவோ ருக்கு ஆண்டுதோறும் 120 கலம் நெல் அளிக்கும்படி செய் திருந்தனன்.

விழாக்கள் :

இராஜராஜனின் பிறந்த நாளாகிய சதய விழாவும், கார்த் திகைத் திங்கள் கார்த்திகை விழாவும் நடைபெற்றன. வைகாசி யில் வசந்த விழாவும், சித்திரையில் பெரிய விழாவும் கொண்டா டப்பெற்றன ஐப்பசிச் சதயமாகிய இராஜராஜனின் பிறந்த நாள் விழா இந்தத் தேவஸ்தானத்தில் கொண்டாடப்பட்டுவரு கிறது.

கல்வெட்டுக்கள் :

இக்கோயில் சுவர்களில் கல்வெட்டுக்கள் பல காணப்படுகின்றன. அவைகளில் இராஜராஜன் காலத்தவை 64, இராஜேந்திரன் I, 29, முதற் குலோத்துங்கன், கோனேரின்மை கொண்டான், மற்றும் நாயக்க மன்னர்கள், சரபோசி மன்னன் முதலியோர் கல்வெட்டுக்களும் உள்ளன.

திருமுறைகண்ட சோழன் :

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர். ஆகிய மூவர் பாடிய தேவாரத் திருப்பதிகங்கள், சிதம்பரம் திருக்கோயிலில் காப்பிடப் பெற்றிருந்தன. இவற்றைத் திருவாரூர் போன்ற கோயிலில் ஓதக்கேட்ட இராஜராஜன் அப்பாடல்களின் சிறப்பை அறிந்து அத்தேவாரத் திருமுறைகளை வெளிப்படுத்த விரும்பினன். அவை இருக்குமிடமறியாது மயங்கினன். அக்காலத்தில் திருநாரையூரில் பொல்லாப்பிள்ளையார் அருள்பெற்ற நம்பியாண்டார்நம்பிகளின் மூலம் திருமுறைச் சுவடிகள் இருக்கும் இடமறிந்து தில்லை சென்று தில்லைவாழந்தணர்களிடம் தம் கருத்தைத் தெரிவித்தான். அவர்கள் தேவாரம் பாடிய மூவர் வந்தால்தான் கதவு திறக்கும் என்று கூறினர். சோழன் ஆராய்ந்து மூவர் திருவுருவங்களையும் அபிஷேக ஆராதனைகள் செய்து எழுந்தருளச்செய்து அறைமுன் கொணர்ந்து நிறுத்திக் கதவைத் திறக்குமாறு செய்தனன். அறையில் இருந்த ஏடுகள் பலவும் சிதல் மூடியிருக்கக்கண்ட மன்னன் சிந்தை நொந்தான். நடராசப்பெருமான் அருளால் 'இக்காலத்திற்கு வேண்டுவன தந்தோம் கவலற்க' என்றொரு அசரீரி எழுந்தது அதைக் கேட்ட சோழன் மனந்தேறி அச்சுவடிகளை எடுத்துச் செப்புப் பட்டயங்களில் படிசெய்து பலகோயில்களிலும் நிலையாய் இருக்குமாறு செய்தனன். கோயில்களில் திருமுறை ஓதுவார்களை நியமித்து; திருப்பதிகம் பாடும்படி செய்தான். திருமுறைகளை வெளிப்படுத்திய காரணத்தினுல் இவனுக்குத் திருமுறைகண்ட சோழன் என்ற பெயர் ஏற்பட்டது.

ஓவியங்கள் :

பெருவுடையார் கோயில், உள் திருச்சுற்றுச் சுவர்களில் வண்ண ஓவியங்கள் பலவும் தீட்டப்பெற்றுள்ளன. சுந்தரர் வரலாற்றின் பலபகுதிகள் சித்திரங்களாக எழுதப்பட்டுள்ளன.

தஞ்சைப் பெரிய கோயிலில் 31—10—68 அன்று நிகழும் இராஜராஜசோழனின் ஐப்பசிச் சதயப் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இக் கட்டுரை வெளியிடப்பெறுகிறது. எழுதியவர் :- வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர்.

தருமையாதீனத்தில்

தமிழ்நாடு தெய்விகப் பேரவை

செயற்குழுக் கூட்டம்



செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட
ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும், மடாதிபதிகளும்,
அறநிலைய ஆணையர்களும்.

தருமையாதீனத்தில்

தமிழ்நாடு தெய்விகப் பேரவை



தருமை, துறைசை, குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும்,
திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும்.

செய்திகள்

தருமையாதீனத்தில்

சதசண்டியக்ஞ விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ அஷ்டாதச புஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகை திருக்கோயிலில் நவராத்திரி விழாவை முன்னிட்டு 18 ஆவது சதசண்டியக்ஞ விழா 23—9—68 திங்கட்கிழமை முதல் தொடங்கி 1—10—68 செவ்வாய்க்கிழமை முடிய உள்ள நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது நாள் தோறும் காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் லக்ஷார்ச்சனையும் ஸ்ரீ வித்யா சக்ரமாகிய மேருவிற்கு சகஸ்ரநாமார்ச்சனையும், நடைபெற்றன. ஸ்ரீ துர்க்காம்பிகை சந்நிதியில் 18-ஆவது சதசண்டியக்ஞமும், சுவாசிநீகுமாரீ வடு பூஜையும் சதுர்வேதம். துர்காசூக்தம், அபிராமி அந்தாதி திருமுறை முதலிய பாராயணங்களும் நடைபெற்றன. 30—9—68 திங்கட்கிழமை மகா பூர்ணாகுதி தீபாராதனையும், 1—10—68 செவ்வாய்க்கிழமை ஸ்ரீ துர்காம்பிகைக்கு அபிஷேகமும், சப்தசதியக்ஞ கலசாபிஷேகமும், ஆறுகோடியே ஐம்பதுலக்ஷம் அருச்சனை பூர்த்தியும் நிகழ்ந்தன.

நாள்தோறும் காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். அன்பர்கள் பலர் வந்து வழிபட்டு அம்பிகையின் அருள்பெற்றனர்.

திருவாவடுதுறை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் விஜயம்

திருவாவடுதுறை ஆதீனம் 22-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 27—9—68 வெள்ளிக்கிழமை மாலை தருமையாதீனம் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி திருக்கோயில் வழிபாட்டிற்குத் தருமைக்கு எழுந்தருளினார்கள்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும் துறைசை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் இரவு 8 மணியளவில் ஸ்ரீ துர்க்காம்பிகை திருக் கோயிலுக்கு எழுந்தருளினார்கள். துர்க்காம்பிகைக்குச் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. துறைசையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் ஸ்ரீ துர்க்காம்பிகைக்குப் பட்டாடை அளித்து அணிவிக்கச் செய்தார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்குப் பொன்னாடைபோர்த்தி மலர்மாலை அணிவித்துச் சிறப்பித்தார்கள். துறைசையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கட்குப் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்கள்.

நவராத்திரி விழாவை முன்னிட்டு, ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு நடைபெற்று வரும் சதசண்டி யக்ஞ விழாவில் பூர்ணாகுதி தரிசனம்செய்து கொண்டு ஸ்ரீ துர்க்காதேவியையும் வழிபட்டுக் கொண்டு திருமடத்திற்கு எழுந்தருளினார்கள். துறைசை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களோடு அளவளாவி மகிழ்ந்து பின் துறைசைக்கு எழுந்தருளியானார்கள்.

ஆதீனக் கல்விநிலையங்களின் கலைமகள் விழா

தருமையாதீனத்தில் உள்ள பல்கலைக் கல்லூரி, உயர்பள்ளி. தொடக்கப்பள்ளி, வேத சிவாகம பாடசாலை தேவார பாடசாலை ஆகிய கல்வி நிலையங்களின் கலைமகள்விழா ஆதீனத் திருநெறிய தெய்வத் தமிழ்மன்றத்தில் 23—9—68 முதல் 1—10—68 வரை உள்ள நாட்களில் மாலை 3 மணி முதல் தொடங்கி நடைபெற்றது. இவ்வாண்டு கலைமகள்விழாச் சொற்பொழிவு பெரியபுராண விரிவியற் சொற்பொழிவாக அமைந்தது தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர். திருநெறிச்செம்மல், நல்லிசைப்புலவர். வித்துவான். திரு. வி சா. குருசாமி தேசிகர். கல்லூரிப் பேராசிரியர்கள் தருமையாதீனப்புலவர், சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலி யார், வித்துவான், சிரோமணி திரு. வி. சபேசன், வித்துவான். திருமதி. ப. நீலா, மன்னன்பந்தல் அ. வ. அ கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், செஞ்சொற்கொண்டல், வித்துவான் திரு. சொ. சிங்காரவேலனார் M. A. (Dip-Ling.) தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியர், திரு. வே. கண்ணப்பன் ஆகியோர் பெரியபுராணத்தில் உள்ள சருக் கங்களைத் தலைப்புக்களாகக் கொண்டு சொற்பொழிவாற்றினர்.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியில், வித்துவான் நான்காம் ஆண்டில் பயிலும் மாணவர்கள் அனைவரும் பெரியபுராணத்தில் நாயன்மார்கள் வரலாற்றைத் தலைப்புக்களாகக்கொண்டு சொற்பொழிவாற்றினர்.

23, 24, 25—9—68 ஆகிய மூன்று நாட்களும் ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி மாணவ மாணவியர்களின் கலைநிகழ்ச்சியும், 29—9-68 ஞாயிற்றுக்கிழமை ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி மாணவ மாணவியர்களின் 'கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது. 26, 27, 28—9—68 ஆகிய மூன்று நாட்களிலும் ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்களால் ''மானமே உயிர்'' 'திருப்பூர்க் குமரன், ''செண்பக மாறன்'' என்ற தலைப்புக்களைக்கொண்ட நாடகங்கள் தக்க இன்னிசைக் கருவிகளுடன் ஒலி நாடகங்களாக நடிக்கப்பெற்றன.

நாள்தோறும் சொற்பொழிவு நிகழ்ச்சிகளும், கலை நிகழ்ச்சிகளும் சிறப்புற நிகழ்ந்தன. மாணவர்கள், ஆசிரியர்கள் முதலிய அன்பர்கள் பலர் வந்து கேட்டுப் பயன்பெற்றனர். கலை நிகழ்ச்சிகளைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்தனர்.

தருமையாதீனத் திருக்கோயில்களில்

நவராத்திரி விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில் கீலக ஆண்டு புரட்டாசித் திங்கள் 7 ஆம் நாள் திங்கட்கிழமை முதல் 15 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை முடிய (23—9—68 — 1—10—68) உள்ள நாட்களில் நவராத்திரி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கொலு அலங்காரங்கள், அபிஷேக ஆராதனைகள், அருச்சனைகள் முதலியன நடைபெற்றன. அம்பாளுக்கு நாள்தோறும் வேறு வேறு விதமான அலங்காரங்கள் சிறந்த முறையில் செய்யப்பெற்றன. ஆதீனத் திருக்கோயில்களில் நவராத்திரி நாட்களில் அம்மை அருளை விளக்கும் சொற்பொழிவுகள் நிகழ வேண்டும் என்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருள் பாலித்த வண்ணம் சொற்பொழிவுகள் நடைபெற்றன. அன்பர்கள் பலர் வந்து தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் அருள்பெற்றனர்.

தருமையாதீனத்துக்குச் சொந்தமான
மாயூரம் ஸ்ரீ காசிவிசுவநாதசுவாமி திருக்கோயிலுக்கு
சுழற்கோப்பை வழங்கும் விழா

சென்னை இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத் துறையினர் இந்த மாவட்டத்தில் உள்ள கோயில்களில் தூய்மையாகவும், செம்மையாகவும் பரிபாலிக்கப்பெறும் திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் சுழற்கோப்பை வழங்கி வருவதை அனைவரும் அறிவர். இவ்வாண்டு தருமையாதீனத் திருக்கோயில்களில் மாயூரம் ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி கோயிலுக்கு இச்சுழற் கோப்பை அளிக்கத் தேர்ந்தெடுத்து வழங்கியுள்ளார்கள். இதற்குரிய சுழற்கோப்பை வழங்கும் விழா 15—9—68-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ஆ. இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. தலைவர் உரையில் 'தருமையாதீனத் திருக் கோயில்கள் அனைத்துமே தூய்மையோடும் செம்மையோடும் பேணப்பட்டு வருகின்றன என்பது அனைவரும் அறிந்த விஷயம். இந்த ஆதீனக் கோயில்களுடன் இதர கோயில்களை யும் ஒன்ருகச் சேர்த்துப் பார்த்தால் ஆதீனக் கோயில்களுக்கே இப்பரிசு தொடர்ந்து கிடைப்பதாக இருக்கும். அந்த முறையில் நன்ருகப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இதை எடுத்துக் காட்டாகக் கொண்டு பிற கோயில்களும் இந்த அளவு தூய்மை யாக இருக்கச்செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

ஆதீனக் கோயில்களை மிக நல்லமுறையில் பாதுகாத்து வரும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு என்னுடைய வணக்கமும் நன்றியும் உரியன' என்று குறிப்பிட்டார்கள்.

சுழற்கோப்பை ஆணையர் அவர்களால் முறைப்படி வழங்கப் பெற்றது. தருமையாதீனம் வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சுழற்கோப்பையைப் பெற்றுக் கொண்டார்கள்.

தஞ்சாவூர் துணை ஆணையர் திரு. T. N. சிங்காரவேலு B. A., B. L., அவர்கள் அறவுரை கூறினர்கள். நாகப்பட்டினம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் திரு. R. அர்ஜுனன் B. A., அவர்கள் கலந்து காண்டு நன்றி நவின்ருர்கள். சுழற்கோப்பையைப் பெற்றுக்கொண்ட வித்து வான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்,

கோயில்களைத் தூய்மையாகப் பரிபாலிக்கச் செய்வதற்கு அற நிலையத்துறையினர் எடுத்துக்கொண்ட இந்த முயற்சி பாராட்டிற்குரியது என்றும் ஆதீனக் கோயில்களைத் தூய்மையுடன் விளங்குவதற்கு பெருமுயற்சி எடுத்துக்கொண்டு அதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்துகொண்டு அருளாட்சி நடாத்தி வரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களுக்கு நன்றியும் வணக்கமும் தெரிவிக்கும் கடப்பாடுடையவர்கள் என்றும் சைவப்பெருமக்கள் துறையினர்க்கும் மற்றையோர்க்கும் ஆதீனச்சார்பில் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். விழாவிற்குப் பெருமக்கள் பலர் வந்து கலந்துகொண்டார்கள். விழா இனிது நிறைவெய்தியது.

ஆதீனத் திருக்கோயில்களில் ஒன்றாகிய திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கு இரண்டு முறை சுழற்கோப்பை வழங்கப்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

வேளூர்க் கிருத்திகைப்பிரசாதம் வழங்கும்விழா

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலைய மன்றத்தில் 14—9—68 மாலை 7 மணிக்கு வைத்தீஸ்வரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா நிலைய மன்றத்தில் அமுதசுரபி ஆசிரியர் திரு. சுவாமிநாத அய்யர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. வேளூர்த் தேவாரம், திருப்புகழ் பிரார்த்தனைக்குப் பிறகு உறுப்பினர்களும், அன்பர்களும் பிரசாதம் பெற்றுச் சென்றனர்.

ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார் குருபூஜை விழா

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலைய மன்றத்தில் 21—9—68 சனிக்கிழமை பூர நட்சத்திரத்தன்று மாலை 7 மணிக்கு ஸ்ரீ அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் குருபூசை விழா சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. ஸ்ரீ கயிலாயநாதர் படத்திற்கும், ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார் படத்திற்கும் போற்றித் திருத்தாண்டகத் திருமுறை அர்ச்சனை நடைபெற்றது. தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையுரையில் தருமையாதீனத்தின் உபதேச நூலாகவுள்ள சிவஞான சித்தியாரை அருளிச்செய்த அருணந்திசிவாசாரியார் சைவசித்தாந்தத்தைத் தெளிவாகவும், விரிவாகவும் விளக்கியவர் என்றும், இவர் தம் பெருமையைத் தாயுமானர், பாதிவிருத்தத்தால் இப்பார் விருத்த

மாக, உண்மை சாதித்தார்'' என்று குறிப்பிட்டுள்ளார் என்றும், தருமையாதீன முதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் ''பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியிற் சித்தியிலே, ஓர் விருத்தப் பாதி போதும்'' என்றும் குறிப்பிட்டுள்ளார் என்றும் அறிவித்தார்கள். திருக்கோயில் ஆசிரியர் திரு. N. R. முருக வேள் சைவ சித்தாந்தம் முதல் ஞானநூல் சிவஞானசித்தியார் என்றும், சர்வ மத மாநாடு ஒன்று நடத்தினால் அதற்குத் தக்க தலைவராயிருந்து நடத்துவதற்குப் பொருத்தமானவர் ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார் என்றும் குறிப்பிட்டார்கள்.

ஸ்ரீ ஏனாதிநாத நாயனார் குருபூஜை விழா

சென்னை, சமயப் பிரசார நிலையத்தில் ஸ்ரீ ஏனாதிநாத நாயனார் குருபூஜை விழா 30—9—68 மாலை 6 மணிக்கு ஜெயின் கல்லூரி மாணவர் திரு. P. கிருஷ்ணமூர்த்தி உபயத்தில் நடைபெற்றது. ஸ்ரீ கயிலாயநாதர் படத்திற்குத் திருமுறை அர்ச்சனை நிகழ்ந்த பிறகு தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ஏனாதிநாதர் வரலாற்றைப் பெரிய புராண மூலச் செய்யுளைத் துணைக்கொண்டு விளக்கினார்கள். ''பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே'' என்று பாரதி பாடினார். ஏனாதிநாதர் பகைவனாகிய அதிசூரன் நரகம் புகாமல் இருக்க ஆயுதந்தாங்கிநின்றே அவனால் வெட்டுண்டார். பெரியோர்கள் பகைவனுக்கும் அருள் சுரக்கும் பெற்றிமை இதனால் விளங்குகிறது என்று குறிப்பிட்டார்கள்.

ஸ்ரீ நரசிங்கமுனையரையர் குருபூசை விழா

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 3—10—68 மாலை ஸ்ரீ நரசிங்கமுனையரையர் குருபூசை விழா நிலைய அன்பர் திரு. M. B. பாலச்சந்திரன் அவர்களின் உபயத்தில் நடைபெற்றது. ஸ்ரீ கயிலாயநாதருக்குத் திருமுறை அர்ச்சனை நடைபெற்றபிறகு தவத்திரு. சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் பெரிய புராணப் பாடல் மூலம் நரசிங்கமுனையரையர் வரலாற்றை விளக்கினார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகளை அபிமான புத்திரராக எடுத்து வளர்த்த பெருமையுடையவர் நரசிங்கமுனையரையர் என்றும், உயிருக்கே ஊறுநேரினும் கோயில் சொத்துக்களைப் பாதுகாப்பதை விரதமாகக் கொண்டவர் இவர் என்றும், திருவாதிரையில் சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்வதுடன் அடியவர்கட்கு உணவும் நூறு பொன்னும் கொடுத்தவர் என்றும் குறிப்பிட்டார்கள்.

எதிர்காலம் - திரு. K. முத்துஜோதிடர்

(கீலகஸ்ஸ ஐப்பசிமீ 1உ முதல் 30உ முடிய)

(17—10—68 முதல் 15—11—68 முடிய)

1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼

அசுவதி, பரணி 8 பாதங்களும் பூர்ணமான சுபத்தையும் கார்த்திகை முதல்பாதம் மிச்ரமான பலனையும் தரும்; தூர யாத்திரையையும், யாக யக்ஞாதி புண்ணியமான பலன்களையும் தந்து உலகத்தில் நன்மதிப்பும். கீர்த்தி பத்திரமும் கிடைக்கச் செய்யும். வரவு. செலவு சமமாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமேயாகும். நூதன கிரக பூமி லாபங்களும். தனலக்ஷ்மி யோகமும், படிப்பு விருத்தியும். மேல்பதவிகளும் உலக பிரசித்தியும் ஏற்படும். மத்திய தேசங்களில் கொஞ்சம் ஆரோக்யக் குறைவு காட்டும். சனி, ஞாயிறு சுபமாகும்.

3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபத்தையே தரும். ஆரோக்யம் உண்டாகும். வம்சவிருத்தி ஏற்படும். மேல்பதவிசள் கிடைக்கும் தெய்வசக்தி பிரகாசிக்கும். இல்லற சுகம் ஓங்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும், சுபமேயாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்களின் கிரய விக்ரயங்களால் லாபம் தரும். விவசாயம் ஓங்கும். வம்ச விருத்தி ஏற்படும். நஷ்டமான பொருள் தானுக வந்து சேரும். தெய்வபலம் காக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். தெய்வம் முன்னின்று காக்கும். வரவு, செலவு சமமாகும். நூதன தொழில்முறை ஏற்படச்செய்யும். உத்தியோகத்தில் மேல்பதவி கிடைக்கும். மேலோர், பெரியோர்களின் அன்பு கிடைக்கும். தொல்லைகள் விலகும். கிரக சுகம் உண்டாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

6. கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். விசேஷமான லாபமும் உண்டுபண்ணும். விவசாயம் ஓங்கும். இடையூறுகள் விலகும். சகல காரியங்களும் சித்தி அடையும். தெய்வபலம் பிரகாசிக்கும். மத்திய காலத்தில் கொஞ்சம். ஆரோக்யக் குறைவும், வைத்தியச் செலவும் ஏற்படும். குடும்பம் ஓங்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்

7. துலாம் - சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுபமேயாகும். வரவு, செலவு சமமாகும். கிரக சுகம் ஓங்கும். எதிர்பாராதனலாபங்களைத் தரும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். அடிக்கடி பந்துமித்ரா ளுடைய சேர்க்கையைத் தரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமேயாகும். தொழில் நிமித்தம் இடம்மாறல் ஏற்படச்செய்யும். மேல் பதவிகள் கிடைக்கும். குடும்பம் ஓங்கும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். சந்தோஷம் தரும். வம்சம் விருத்தியாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரபலனைத்தரும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். வியாபாரம் ஓங்கும். நஷ்டமான பொருள் வந்து சேரும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். வரவு, செலவு சமமாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தையே தரும். தூர யாத்திரை ஏற்படும். நூதனமான முறையில் தொழில்

ஏற்றமும், அனேகருடைய கூட்டுத் தொழிலும், ஏற்பட்டு உலக பிரவிருத்தியை உண்டுபண்ணும். யக்ஞயாகாதி பலன்களும், பிரதிஷ்டா பலன்களும் கிடைக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

11 கும்பம்-அவிட்டம் ½, - சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும் நூதனமான தொழிலும், அன்னிய தேசங்களிலிருந்து யந்திர சாதனங்களும் கிடைக்கும். விவகாரம் ஜெயிக்கும்; ஸ்த்ரீ மூலமாய் தனமும், ஆரோக்யமும் தரும். புதன், வியாழன் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்ரபலனைத்தரும். வரவு. செலவு சமமாகும். தெய்வபலம் முன்னின்று காக்கும். மேலோர் பெரி யோர்களின் அன்பும், மேல்பதவிகளும் கிடைக்கும். கிரகசுகம் ஏற்படும். ஆரோக்யம் தரும். வெள்ளி, சனி சுபமாகும்.

குறிப்பு :- ஆசேது இமாசல பரியந்தம் சர்வேசுவரன் சர்வேசுவரியால் ரக்ஷிக்கப்பட்டு வருகிறது என்பது நமது பாரத பூமியில் ஜனித்த ஒவ்வொருவருக்கும் பூர்ணமான திட நம்பிக்கை. அப்படியேதான், எத்தனையோ மாறுதல்களை மனுஷ தேவாள் தன் அதிகார பலத்தால் நடத்திக்காட்டினுலும், நான் இருக்கிறேன் என்பதையும், நமது ரக்ஷகனை சர்வேசு வரன் நமக்குத் தெரியப்படுத்தி, நம்மை நல்ல வழியில் செல்லும் படி செய்து வருகிறுர். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதுதான் பிரமாணம். இம்மாதம், கிரக நிலைகளால் தெரிவிக்கக் கூடிய உலக சுபிக்ஷ, துர்பிக்ஷ காரணங்களில், அதிவிருஷ்டி, அகாலவிருஷ்டி, பிரசண்ட வாதம் முதலிய இயற்கைக் கோளாறுகள் மூலமாக நமக்குப் பயம் ஏற்படாமல், நம்மை மன்னித்து, நமக்கு சுபிக்ஷகரமாக, எவ்வித ஈதிபாதை களும், ஏற்படாமல் காப்பாற்ற சதாகாலமும் பக்த ஜனங்களும், சாதுக்களும் பெரியோர்களும் முன் மாதங்களில் தெரிவித்திருந்த படி தெய்வ காரியங்களை ஆங்காங்கு காலதேச சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி பக்தி பூர்வமாய்க் கடமைகளைச் செய்துகொண்டு சகல பாரத்தையும் எம்பெருமானிடம் ஒப்புவித்துவிட்டு அவனையே தியானம் செய்துகொண்டுவர சமஸ்த மங்களமும் உண்டாகும். கலிபலம் ஒதுங்கி நிற்கும். நமது தக்ஷிண தேசமே (தஞ்சாவூர்) (திருச்சியே) உலகம் பூராவையும் காப்பாற்றும். எங்கும் தனம், தான்யம், உணவுப் பொருள்கள் விசேஷ விருத்தியாகும். சுபமுண்டாகும்.